Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம்
- 7 JUN 2004


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 18 (07.06.2004) திங்கட்கிழமை இதழ்:249


விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி

T.P -021-222-7310




மாணவர் எழுச்சி நாள் ஊர்வலம்

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம் முதலான பகுதிகளில் மாணவர்களின் ஒழுங்கமைப்புக்களின் கீழ் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

அனைத்துப்பகுதியிலும் மாணவரின் எழுச்சி ஊர்வலங்களும் எழுச்சிக் கூட்டங்களும் சிறப்பாக இடம்பெற்றன.

யாழ்.நகரப்பகுதியில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான மாணவர் எழுச்சி ஊர்வலம் யாழ்.இந்துக்கல்லூரியில் நிறைவுபெற்றது.

தமிழீழ மாணவர் ஒன்றியத் தலைவர் குணேந்திரன் தலைமையில் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை குறித்த இரகசியத் தகவல்களுடன் 'றோ' அதிகாரி வெளிநாட்டுக்கு தப்பியோட்டம்!

## இந்திய அரசின் விசாரணைகள் ஆரம்பம்

(புதுடெல்கி)

**இந்தியப் புலனாய்வுத்துறையான 'றோ'வின் உயர் அதிகாரி ஒருவர் இலங்கை, உள்ளிட்ட நாடுகளின் இரகசிய ஆவணங்களுடன் இந்தியாவை விட்டுத்தப்பி ஓடிவிட்டதாக புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்தன.**

**இந்தச்சம்பவம் தொடர்பாக றோ அமைப்பு உயர்மட்ட விசாரணைகளுக்கு உத்தரவிட்டிருப்பதுடன்,இம்மாதம் மூன்றாம் வாரத்துக்குள் இந்திய மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.**

**இந்தியாவின் பாதுகாப்பு மட்டத்தில் பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது**

இந்தியப் புலனாய்வு அமைப்புக்களில் ஒன்றான 'றோ' பாதுகாப்பு சம்பந்தமான ஆய்வுகள் மற்றும் வெளிநாட்டுப்புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த 'றோ' அமைப்பின் இணைச் செயலாளராக இருந்த ரவீந்தர்சிங் என்ற அதிகாரியே இராணுவ மற்றும் புலனாய்வு இரகசியங்களுடன் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடியவராவார்.

இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய ஆவணங்கள் இவரது பொறுப்பில் தான் இருந்தது.

கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி இவர் தன்வசம் இருந்த சில முக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கம்போடியாவுடன் இலங்கை உளவுப்பரிமாற்ற ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும், கம்போடியாவுக்கும் இடையில் இராணுவ உளவுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்வது தொடர்பான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து கம்போடிய அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத அங்கு சென்றுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது.

கம்போடியாவிலிருந்து உளவுத் தகவல்களை இலங்கை பரிமாற்றம் செய்துகொள்வதற்கான ஏற்பாடுகளை இந்த ஒப்பந்தம் செய்யுமென்று தெரிவிக்கப்படுகிறது.

## புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொட்டேகொ

## பெரும்பான்மையை நிரூபிக்க

வடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறது.

இந்த 'றோ' அமைப்பின் இணைச் செயலாளராக இருந்த ரவீந்தர்சிங் யவராவார்.

இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய ஆவணங்கள் இவரது பொறுப்பில் தான் இருந் தது.

# பெரும்பான்மையை நிரூபிக்க 'ஒப்பரேசன் 113' ஆரம்பமானது!

(கொழும்பு)

'ஒப்பரேசன் 113' என்ற குறியீட்டுப் பெயரில் நாடாளுமன்றத்தில் தம்மு டைய பெரும்பான்மையைக் காட்ட ஜனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரட்டுவ தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

113 அங்கத்தவர்களின் ஆதரவைக் காட்டுவதற்கு இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் விதித்த நிபந்தனைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்றுக்கொண்டதாக தகவல்கள் வெளியானபோதும், அந்த முயற்சி தோல்வியடைந்ததாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பி முதலில் வைத்திருந்த 35 (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி இளைஞர்கள் கொழும்பில் வைத்து கைது

கொழும்பிலுள்ள ரெலிகொம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அலுவலகம் அமைந் துள்ள பகுதியில் படப்பிடிப்பில் ஈடு பட்டிருந்த இரண்டு கிளிநொச்சி இளைஞர்களை படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த அலுவலகத்தின் வெளிப் புறங்களை நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இரு இளைஞர்கள் படம்பிடித்துக் கொண டிருந்தவேளை அங்கு காவலுக்கு நின்ற படையினர் இருவரையும் கைதுசெய்ததாக படைத்தலைமை தெரிவித்தது.

கிளிநொச்சி அம்பாள் நகரைச் சேர்ந்த செல்வத்துரை கிரிதரன், நடேசன் வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த கந்தவேலு கிருபானந்தராசா (12 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொட்டேகொட

## முதலாம் திகதி பதவியேற்பார்



இலங்கை இராணுவத்தின் 17 ஆவது தளபதியாக மேஜர் ஜென ரல் சாந்த கொட்டேகொட அடுத்த மாதம் முதலாம் திகதி பதவியேற்க வுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதியாக இருக் கும் லெப்.ஜெனரல் பலகல்லவின் பதவிக்காலம் இம்மாத இறுதியுடன் முடிவடைகிறது. இந்த நிலையில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட புதிய இராணுவத் தளபதி யாக நியமிக்கப்படவுள்ளார்.

இப்போது இராணுவத் தலைமை அதிகாரியாக பதவி வகிக்கும் இவா கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி யாகவும் பதவி வகித்து வருகிறார்.

1978 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ். மாவட்ட படைத்தளபதி பத வியை வகிக்காது இராணுவத் தள பதியாக நியமிக்கப்படும் முதல் நபர் இவராவார்.

கொட்டேகொட 1993 இல் பூந கரி முகாம் தாக்கப்பட்டபோது 10 ஆவது பிரிகேட் தளபதியாக இருந் தவராவார்.

புலிகளுக்கு எதிரான போர் நட வடிக்கைகளிலும் முக்கிய பங்கை வகித்த இவர் ரணில் விக்கிரமசிங்க அரசு காலத்தில் சமாதான நடவடிக் கைகளில் பங்காற்றியவர்.

இதேவேளை, கடற்படைத் தளப தியான வைஸ் அட்மிரல் தயா சந்த கிரி பாதுகாப்பு அதிகாரிகளின் தலை மைப் பொறுப்பை ஏற்கவுள்ளதாக வும் கூறப்படுகின்றது.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட இராணுவத் தளபதியாக நிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா கூமாங்குளத்தில் ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை!

(வவுனியா)

வவுனியா கூமாங்குளப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளை ஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சதீஷ் (வயது 21) என்ற முச்சக்கர வண்டிச் சாரதியே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

கூமாங்குள அம்மன் கோயிலுக்கு அருகில் வீதியோரக் காணியொன்றி லிருந்து அவரது சடலமும், அவர் ஓட்டிச் சென்ற முச்சக்கர வண்டியும் நேற்றுக்காலை கண்டெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

(சி/2489)

## தேசியத்தலைமைக்கு முண்டுகொடுத்து

# மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு

# அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்!

## மாணவர் எழுச்சி நாளில் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

எமது விடுதலைப் போரின் வெற்றியை நோக்கி காய் நகர்த்தும் தேசியத் தலைமைக்கு சகல வழிகளிலும் முண்டுகொடுத்து எமது எதிர்கால மாணவ சந்ததியின் சுதந்திரமான அறிவுத்தேடலுக்கு வழிசமைப்போம்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாளில் மாணவர்கள் பிரகடனம் செய்து உறுதியெடுத்துக் கொண்டனர்.

தமிழீழ மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள எழுச்சிப் பிரகடனத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் தாயகம் எங்கும் பரந்து வாழும் மாணவர் மனங்களில் எழுச்சி பொங்கும் நாள். தேசியத்தின் விடுதலைக்கான எழுச்சி ஒவ்வொருவரின் மனங்களிலும் நிகழவேண்டிய வரலாற்றின் காலம் இது.

எமது வாழ்விற்கு உதவாத கல்விக்கொள்கையை எமக்குப் புகுத்த வேண்டும் என்பதற்காக பள்ளிகள் தோறும் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும், கட்டுப்பாடுகளுக்கும் உள்ளாகி ஒடுக்கப்பட்டும், கல்வியில் சாதிக்க எங்களால் முடியாது என்ற தாழ்வுச் சிக்கலுக்குள் அகப்பட்டும், ஏச்சும், நையாண்டியும் நிறைந்த அதிகார வன்முறைக்குள் அகப்பட்டும், சுயம் இழந்து, சுயம் பற்றிச்சிந்தித்து எதிர்காலத்தை நிர்ணயிக்கவே முடியாது நடைப்பிண வாழ்வு வாழும்நிலை மாறவேண்டும்.

எமது மன அழுத்தங்களில் இருந்தும், துன்பச்சுமைகளில் இருந்தும் விடுபடக்கூடிய வழிகாட்டலே எமக்கு விருப்பமானதும் வேண்டுவதுமாகும். கல்விமுறைவழி என்பது மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் ஊடகம் என்ற நிலைமாறி எங்களை நாங்கள் தொலைக்கும் நாட்களாய் பள்ளி நாட்கள் கரைந்து போவதை நாங்கள் வெறுக்கின்றோம்.

இனவாத அரசுகள் எம்மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறைகள் ஏராளம். தமிழீழ மக்களின் பெருஞ்சொத்து கல்வி என்பது அகிலம் அறியும். அதனை சிதைக்கவென்றே பல வழிகளிலும் கட்டுப்பாடுகளை விதித்து வந்தது சிங்கள அரசு. அதனையும் வென்று தமிழீழ மாணவர்கள் உலகெங்கும் தமது திறமையைக்காட்ட வெளிப்பட்ட போது, பேரினவாதிகளால் சகிக்க முடியாது போயிற்று. இனவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தமிழீழத்தின் முக்கிய பட்டினங்கள் தோறும் தூண்டிவிட்டு எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றனர்.

இராணுவம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த தமிழீழ பட்டினங்கள் எங்கும் பண்பாட்டுச் சீரழிவினைத் திட்டமிட்டு மேற்கொண்டனர் பேரினவாதிகள். தமிழ்த்தேசத் துரோகக்குழுக்களும் இதற்குத் துணை போயினர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னால், தமிழீழ விடுதலைப் புலிகள் எமது பகுதி எங்கும் கால் பதித்த பின்பு, எங்களால் உண்மைகளை உணரமுடிகின்றது. பேரினவாத நச்சுப்புகையினுள் புதையுண்டு போன கணிசமான மாணவ சமூகத்தை நாங்கள் மீட்டு எடுக்க வேண்டும்.

தேசிய உயிருணர்வு அவர்களின் இதயச்சுவடுகளுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் தேச விழுமியம் பேணப்படும், பண்பாடும் காக்கப்படும். எமது தேசியத் தலைமையின் கீழ் விழிப்போடு நாங்கள் நிமிரவே விளைகின்றோம். நாங்கள் எங்கள் வாழ்வுபற்றிக் கற்பனை பண்ணவும், புதுவழி கண்டு பிடிக்கவுமான மனநிலை எமக்கு வேண்டும். அதற்கான சூழல் வேண்டும். சுதந்திரம் வேண்டும். கல்விக்கூடங்களில் மட்டுமல்ல, தேசமெங்கும் இந்த சுதந்திரம் வேண்டும்.

தமிழீழ மாணவர் சமூகத்தின் எழுச்சி என்பது எங்களுக்குப் புதிதல்ல. மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோர் தம்மைத்தாமே ஆகுதியாக்கி தமிழீழத் தேசிய மாணவ சமூகத்தினை விழிப்படைய வைத்தனர். எத்தனை ஆக்கிரமிப்புக்கும் மத்தியிலும் பாடசாலையில் இருந்து, பல்கலைக்கழகம் தாண்டியும் எமது மாணவர்கள் தேசிய விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர்.

எமது தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு மேகங்கள் எம்மைச் சூழ்ந்திருக்கும் வரையில் எமது முழு ஆற்றலையும் வெளிக்கொணர முடியாது என்பதையும் நாம் அறிவோம். எமது தேசிய விடுதலையின் வேருக்கு நீர் ஊற்றியபடியே தமிழீழ மாணவர்களாகிய நாங்கள் தலை நிமிர்வோம்.

மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி இருவரினதும் ஆன்மபலம் எங்கள் ஒவ்வொருவர் மீதும் தன் சக்தியை பாய்ச்சட்டும்.

தமிழீழத் தேசிய ஆன்மாவாக உலகம் வியக்கும் வகையில் எமது விடுதலைப் போர் சதுரங்கத்தில் வெற்றியை நோக்கி காய்நகர்த்தும் எம் தேசியத் தலைமைக்கு சகல வழிகளி லும் முண்டு கொடுப்போம். எம் எதிர் கால மாணவ சந்ததியின் சுதந்திர மான அறிவுத்தேடலுக்கு வழிசமைப் போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் படங்களைத் தாங்கிய மாணவர்களது ஊர்வலம்



தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றியபோது



மாவீரன் சிவகுமாரனின் திருவுருவப்படத்திற்கு நல்லூர் கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் திருமகள் மலர் மாலை அணிவித்தபோது


## ராஜ் தொலைத்தொடர்பு

**கல்வியங்காட்டில் புதிய உதயம்**

ராஜ் தொலைத்தொடர்பு நிலையம் உலகெங்கும் வசிக்கும் உங்கள் உறவுகளுடன் பேசிமகிழ

**INTERNET** மூலம்-

நிமிடத்திற்கு ரூபா~7, இரவு 7 மணிக்கு பின் ரூபா~5.

உள்ளூர் அழைப்பு நிமிடத்திற்கு ரூபா-8. இரவு 6 மணிக்குப் பின் நிமிடத்திற்கு ரூபா-5.

தொலைபேசி - இல - 021-2225606
021-4590746

ராஜ் தொலைத்தொடர்பு நிலையம்
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு

(C/2643)


# பணி நிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணி நிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.06.09 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

*பணிநிலை:-*

I. காப்பாளர்

II. எழுதுனர்

III. வரி அறவீட்டாளர்.

*தகைமைகள்:-*

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல்வேண்டும்.

02) அகவை 18 -35 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும்**

☛ நாள்:- 2004.06.09

☛ நேரம்:- காலை 10.00 மணி

☛ இடம்:- 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

✓ குறிப்பு:- நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல்வேண்டும்.

**ஆளுகை,
சந்தைப் பகுதி,
யாழ்.மாவட்டம்.**

(752)


## வாடகை வீடு தேவை

நெல்லியடி நகரத்தில் பிரதான வீதியில் (நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில்), அலுவலக உபயோகத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு ஒன்று உடன் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு :
கண்ணன்,
217/3, கடைச்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 0777-763071 (754)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த

(ரீகல்ஸ்) **கில்லி**



(சி-2622)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

## நிறஞ்சனாஸ் சங்கானை

கார்த்திக், ரோஜா, மணிவண்ணன் நடித்த

**சின்னராஜா**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 .(பு.நே)

**AMERICAN PIE**

(சி-2621)

## ராஜா யாழ்ப்பாணம்.

3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த

**ஆய்த எழுத்து**



காட்சிநேரம்:-10.30,
2.30,6.30 மட்டும் (பு.நே)

(சி-2623)


## நன்றிகளும் - பாராட்டுக்களும்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் எம்மால் தவறவிடப்பட்ட முக்கிய ஆவணங்களைக் கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்த வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர் K.புவிசங்கர், S.சிற்பவன், R.ரமேஷ் ஆகியோருக்கு எமது நன்றிகளும், பாராட்டுக்களும்.

யாழ்.கொழும்பு சேவை
T.P : 0777-879525

விஜய் (ராஜா),
கொலின் ரவல்ஸ்,
கொழும்பு.

(753)

# உதவிவழங்கும் மாநாட்டு அறிக்கையில் முஸ்லிம்களின் கோரிக்கை புறக்கணிப்பு

## முஸ்லிம் காங்கிரஸ் விசனம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கு பற்றவேண்டும் என்ற முஸ்லிம்களின் கோரிக்கை குறித்து பிரஷெல்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட் டின் பின் வெளியிட்ட அறிக்கையில் எந்த கருத்தும் குறிப்பிடவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து முஸ்லிம் காங் கிரஸ் வெளியிட்ட செய்திக்குறிப் பில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பிரஷெல்ஸில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற இந்த மாநாட் டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சமாதான பேச்சுவார்த் தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பு குறித்து எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை.

ரோக்கியோ மாநாட்டை மேற் கோளகாட்டி இந்த மாநாட்டின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வார்த்தைப் பிரயோகங்கள், வேண்டு மென்றே நோர்வே தரப்பினால் திணிக கப்பட்டவை என காங்கிரஸின் தலை வர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தி னார்.

நேற்றுமுன்தினம் அம்பாறையில் காங்கிரஸின் மத்திய குழு கூடிய வேளையில்,கருத்துரைத்த அவர், இலங்கை தொழிலாளர் காங்கிர ஸும், தமது கட்சியும் இணைந்து, தேசிய அரசியலில் தமது மக்கள் எதிர் நோக்குகின்ற சவால்கள் தொடர்பில் தொடந்தும் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை பலவீனமாக வைத்துக்கொண்டே, தமிழ், முஸ் லிம் மக்களின் இலக்குகளை அடைய முடியும். என தெரிவித்த ஹக்கீம், அரசாங்கத்தைப் பலப்படுத்தி விட்டு இந்த இனங்களின் இலக்குகளை அடையமுடியாது எனவும் குறிப்பிட் டார். (01)

# வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு

## திறைசேரி செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் இணைந்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் வேலையற்ற பட்டதாரிகள் அனை வருக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங் கப்படும் என - திறைசேரி செயலா ளர் பேராசிரியர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஜூலை மற்றும், ஒகஸ்ட் மாதங் களில் நியமனங்கள் வழங்கப்படும். இந்த நியமனங்கள் வழங்கும் நட வடிக்கையில் எந்த அரசியல் தலை யீடும் இருக்காது.

தற்போது அரச அலுவலகங் களில் குறிப்பிடத்தக்க வெற்றிடங் கள் உள்ளன. மேல்மாகாண சபை யில் மட்டும் 12 ஆயிரம் வெற்றிடங் கள் உள்ளன.

கல்வி அமைச்சிலும் 9 ஆயிரம் வெற்றிடங்கள் இருக்கின்றன. விண் ணப்பதாரிகளிடையே நேர்முகப் பரீட்சைகளை நடத்தி, தகுதியான வர்களைத் தெரிவுசெய்து வேலை யற்றிருக்கும் அனைவருக்கும் அரச வேலைவாய்ப்புக்களை வழங்குவதே அரசாங்கத்தின் தீர்மானம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 27 ஆயிரம் பட்டதாரிக ளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு திட்டமிட்டுள்ளபோதும், 52 ஆயிரத்து 986 பட்டதாரிகள் இது வரை பதிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தலைச் செலவின்றி நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபை தேர் தலை அதிக செலவின்றி நடத்தி முடிக்கவேண்டும் என தேர்தல் ஆணையாளர் தமது அதிகாரிக ளிடம் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையாளர், தேர்தல் தெரிவத் தாட்சி அதிகாரிகள், மற்றும் உதவித் தேர்தல் அதிகாரிகளை சந்தித்தார், இதன்போது எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ள 6 மாகாண சபைத் தேர்தலின்போது தேர்தல் அதிகாரிகளுக்கான உண வுகளுக்கான கேள்விப் பத்திரங்க ளைக் கோராது, மாற்று நடவடிக் கைகளை செயற்படுத்துமாறு, ஆணையாளர் தமது அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

அரசாங்க வாகனங்களை மாத் திரம் தேர்தல் கடமைகளில் ஈடு படுத்துமாறு கேட்டுக்கொண்ட அவர், இந்த தேர்தல்களுக்கு உள்நாட்டின் கண்காணிப்பாளர்கள் மாத்திரமே ஈடுபடுத்தபடவுள்ளதாகவும் குறிப்பிட் டார்.

# தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் பாதுகாப்பாக நாடு திரும்ப உதவவேண்டும்!

## கடற்படைத் தளபதிக்கு ஜயலத் கடிதம்

இலங்கையின் வடக்கு - கிழக் குப் பகுதியில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங் கைத் தமிழ் அகதிகள் பெருமளவில், எதுவித பாதுகாப்புமின்றி தாயகம் திரும்புவதாகவும், எனவே இவர்க ளுக்கான பாதுகாப்பு வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கடற்படைத் தளபதி வைஸ் அட்மி ரல் தயா சந்தகிரிக்கு அனுப்பிவைத் துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அந்தக் கடிதத் தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது -

கடந்தகாலப் போர்நடவடிக்கை யால் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் இங்கு வாழவழியற்ற நிலையில் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு அகதிமுகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கி யுள்ளனர்.

தற்போது இலங்கையில் ஏற்பட் டுள்ள அமைதிச் சூழலையடுத்து இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து மீன்பிடிப் படகுகள்மூலம் பாதுகாப் பற்ற முறையில் எதுவித குடிவரவு- குடியகல்வு நடைமுறைகளையும் பின் பற்றாமல் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்காக பெருமளவில் வந்தவண்ணமுள்ளனர்.

ஆனால், 2002 ஆம் ஆண்டு நான புனர்வாழ்வு மீள்குடியமர்த்துகை அமைச்சராக இருந்தவேளை தமிழ் நாட்டில் வாழும் அகதிகளின் பிரச் சினைகளை தமிழ்நாட்டிற்குச் சென்று அவதானித்து அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடி னேன்.

அத்துடன் இந்த அகதிகளை தமது சொந்த இடங்களில் மீளக்குடி யமர்வதற்கு, தமிழ்நாட்டிலிருந்து திரும்புவதற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் என்னால் மேற்கொள் ளப்பட்டது.

இதன்படி இலங்கை கடற்படை, யு.என்.எச்.சி.ஆர், அரசாங்க அதிபர் கள் மற்றும் யாழ்ப்பாண, மன்னார் மாவட்டங்களின் கத்தோலிக்க ஆயர்க ளுடன் கதைத்து வேண்டிய ஒழுங்கு களைச் செய்ததுடன், யு.என்.எச்.சி ஆரிடமிருந்து அகதிகள் தொடர்பாக நாளாந்தம் தகவல்களையும் பெற்று வந்தேன்.

தமிழ்நாட்டிலிருந்து திரும்பி வரும் அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவ தற்கு வேண்டிய சகல ஏற்பாடுக ளையும் செய்யுமாறு வடக்கு - கிழக்கு பகுதி அரசாங்க அதிபர்களுக்கு நான் மேலதிக அறிவுறுத்தல்களை யும் வழங்கினேன்.

அத்துடன் தமிழ்நாட்டிலிருந்து அகதிகள் திரும்புவது தொடர்பான சட்டச் சிக்கல்கள் குறித்து தமிழ் நாடு மற்றும் டெல்கி அரசுகளுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி னேன்.

ஆனால், தற்போது அரசாங்கம் மாறியுள்ள சூழ்நிலையில் புனர் வாழ்வு, புனரமைப்பு அகதிகள் விவ காரத்திற்கு எந்தவொரு அமைச்ச ரும் நியமிக்கப்படவில்லை.

இந்தவகையில் தமிழ்நாட்டில் தங்கியுள்ள எமது நாட்டு பிரஜை கள் மீளவும் தாயகம் திரும்பும் போது எவ்வித தொந்தரவுகளையும் மேற்கொள்ளாது அனுசரணையாளர் நிலையை அரசாங்கமும் மற்றையவர் களும் வகிக்கவெண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக அகதிகள் மீள் திரும்புகையில் இலங்கை கடற்படை யினர், தேவையில்லாத தொந்தரவு களை அவர்கள்மீது செலுத்துவ தைத் தவிர்க்கவேண்டும். இதற்கு இணைப்பாளர்களாக அரசாங்க அதிபர்கள் செயற்படவேண்டும்.

எனவே, இந்த அகதிகள் மீளத் திரும்பும்போது அவர்களுக்கான பாதுகாப்பினை வழங்குமாறும், வட பகுதியிலுள்ள மக்களும் இந்நாட்டு மக்கள்தான் என்பதனையும், இனப் பிரச்சினையால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

# நான்கு இளைஞர்கள் கைது; மக்கள் முன்னணி ஆட்சேபனை!

புளத்சிங்கள மில்லகந்த தோட் டத்தின் நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக மலையக மக்கள் முன்னணி பொலிஸ் மா அதிபரிடம் ஆட்சேபனை தெரி வித்துள்ளது.

அண்மையில் இந்த தோட்டத் தில் இடம்பெற்ற தாக்குதல் சம் பவத்தில் 11 பேர் காயமடைந்தது டன், நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் சம்பவத்தில் ஈடுபட்டோர் கைது செய்யப்படாமல், பாதிக்கப்பட்ட நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக முன் னணியின் தலைவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

நேற்றுமுன்தினம்' மில்லகந்த தோட்டத்துக்கு விஜயம்செய்த, மலையக மக்கள் முன்னணியின் தலை வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.ராதாகிருஷ்ணனும் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந் தனர்.

இதன்போதே கைதுசெய்யப்பட்ட நால்வர் தொடர்பான தகவல் வெளி யானது. இதன்பின்னர் பொலிஸ் மா அதிபருடன் தொடர்புகொண்டபோது, உடனடியாக கைது செய்யப்பட்ட வர்களை விடுதலைசெய்ய அவர் நட வடிக்கை எடுப்பதாக உறுதியளித் தார். கேசவக்குமார், விஜயா, முரளி தரன் மற்றும் யோகானந் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கடிதத்திற்கு கண்காணிப்புக்குழு பதில் அனுப்பவில்லை!

போர்நிறுத்த கண்கானிப்பு குழு வினரின் நடவடிக்கைகள் தொடர் பாக பாதுகாப்பு அமைச்சின் செய லர் சிறில் ஹேரத் அனுப்பிய கடிதத் துக்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதுவரை பதிலளிக்கவில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு சிலவேளைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக ளுக்கு சாதகமாக நடந்துகொள்வ தாக பாதுகாப்பு அமைச்சின் செய லர் தமது கடிதத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கு இராணுவத்தினரே காரணம் என தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்துவதாகவும், இது அடிப்படையற்றது என்றும் இதனை போர்நிறுத்த கண்காணிப்பு குழு அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதையும் பாதுகாப்பு செயலர் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரின் கவனத்துக்குகொண்டு வந்திருந்தார்.

# இலங்கை ஐரோப்பிய ஒன்றியம் மீள அனுமதி ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை அரசுக்கும், ஐரோப் பிய ஒன்றியத்துக்கும் இடையிலான மீள்அனுமதி ஒப்பந்தம் ஒன்று நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட் டது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசின் தரப்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம். ஜீ.எஸ்.பாலிக்காரவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் புதுடில்கியில் உள்ள இலங்கைக்கான அயர்லாந் துத் தூதுவர் பிலிப் மெக்டோனா வும், இலங்கைக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிக் குழுவின் தலைவர் வூட்டர் வில்டனும் கைச் சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி உரிய ஆதாரங்களுடன் கூடிய இணக்கப் பாடுகளுடன் ஒருவர் தனது சொந்த நாட்டில் மீள்குடியேற அனுமதிக்கப் படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. அத்துடன், ஏனைய நாட்டுப் பிரஜைகளும் ஏனைய நாடுகளில் குடியேற அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்தி டும் தரப்பினர் சட்டவிரோத ஆட் கடத்தல், சட்டவிரோதக் குடியேற் றம் மற்றும் பயங்கரவாத நடவடிக் கைகளுக்கு நிதியுதவியினை வழங் கும் செயற்பாட்டினை தடுத்து நிறுத் துதல் போன்ற நடவடிக்கைகளை யும் மேற்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸ் தேவானந்தாவுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்ஸ்ரீட் - ஈ.பி. டி.பி கட்சியின் செயலாளரும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந் தாவைச் நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சுக்களை நடாத்தினார்.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச்சந்திப்பில், யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் குறித்தும், வட- கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்தும் அமெரிக்கத் தூதுவரிடம் விரிவாக எடுத்துக்கூறியதாக ஈ.பி.டி.பி யினரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# சாப்பாட்டுக்கடையில் மோதல்; நால்வர் காயம்; 60 பேர் கைது!

மட்டக்களப்பு நகரிலுள்ள உண வுக்கடையொன்றை, தாக்கமுற்பட் டார்கள் எனத் தெரிவித்து, மட்டக் களபபு தனியார் பஸ் சாரதிகள் மற் றும், நடத்துநர்கள் உட்பட, 60 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு நகரிலுள்ள உண வுக்கடையொன்றிற்கு நேற்று முன் தினம் சென்ற தனியார் பஸ்சாரதி கள் மற்றும் நடத்துநர்கள் மூவர் அங்கு உணவு பரிமாறும் பணியில் ஈடுபட்ட பெண்பிள்ளைகள் மீது, சேட்டை புரிய முற்பட்டனர்.

இதனையடுத்து குறித்த பெண் பிள்ளைகள் உணவு நிறுவன உரி மையாளரிடம் தெரிவித்தனர்.

உணவு நிறுவன உரிமையாளர் சேட்டை புரிய முற்பட்டவர்களை ஏசிக் கலைத்துள்ளார். இதனால், ஆத்திரமடைந்த அந்த தனியார் பஸ் சாரதி, நடததுநர்கள் மேலும் தனது ஆதரவான தனியார் பஸ், சாரதிகள், நடத்துநர்களை அழைத்து வந்து உணவுக்கடையை தாக்கிய துடன், உணவுக்கடை உரிமையா ளர்களையும் அடித்துக்காயப்படுத் தினர்.

இதன்பின்னர் ஆத்திரமடைந்த உணவு நிறுவனத்தில் வேலைசெய் யும் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் காலை தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் மூவரை வெட்டிக்காயப் படுத்தினர்.

இதனையடுத்து, தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீளவும் உணவுநிலையத்தை தாக்க பெருமளவில் சென்றவேளை இவர் களில் 60 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவங்களில் காயம டைந்த அனைவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

# பங்களாதேஷ் அணிக்கு எதிராக சர்வான், லாறா சதமடித்தனர்!

பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்சில் பிறைன் லாறா மற்றும், சர்வான் ஆகியோர் அடித்த சதங்களின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 294 என்ற வலுவான நிலையைப் பெற்றது.

சமீனாபார்க்கில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் பங்களாதேஷ் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 264 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆரம்பமானது.

ஆட்டம் ஆரம்பமாகி சற்று நேரத்தில் பங்களாதேஷ் அணி 284 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, ரபாஷ்பாஸ்யா 48 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதையடுத்து முதலாவது இனிங்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கிய கிறிஸ் ஹைஹல் 14 ஓட்டங்களுடனும், சிமித் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததையடுத்து, அணித்தலைவர் லாறாவும் சர்வானும் களமிறங்கினர்.

இருவரும் இணைந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். லாறா 147 பந்துகளில் 12 பவுண்டறிகள் 3 சிக்சர்களுடன் 119 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், மொகமட் ரபீர் வீசிய பந்தை காலித் மசூத்திடம் பிடிகொடுத்து



ஆட்டமிழந்தார்.

சர்வானுடன், பெஸ்ட் ஜோடிசேர்ந்து ஆடிக்கொண்டிருந்த போது, 3 விக்கெட் இழப்பிற்கு 294 என்ற நிலையில இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுற்றது.

சர்வான் 186 பந்துகளில் 11 பவுண்டறிகளுடன் 106 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

## குழந்தை பிறந்ததகவல் கிடைத்ததும் மைதானத்திலிருந்து வெளியேறிய வோகன்

நியூஸிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது - இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகனுக்கு பெண்குழந்தை பிறந்தது. இதனால், வோகன் போட்டி நடுவர் கிளைவ்லொயிட்டின் அனுமதியுடன் மைதானத்தை விட்டு வெளியேறி மருத்துவமனைக்குச் சென்றார்.

போட்டி ஆரம்பமாகும் முன்னரே தனது மனைவியை வைத்தியசாலையில் பிரசவத்திற்காக சேர்த்த வோகன் போட்டி நடைபெறும்போது, குழந்தை பிறந்த செய்தி கிடைத்ததும் மைதானத்தை விட்டுவெளியேறி விடுவேன் எனக் கூறியிருந்தார்.


அதன்படியே இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, பெண் குழந்தை பிறந்த தகவல் கிடைத்ததும் வுபீல்ட் நகரிலுள்ள வைத்தியசாலைக்கு விரைந்து சென்றார்.

## தேர்வுக்குழு மீது அசார் பாய்ச்சல்!

பாகிஸ்தான் அணியின் தலை சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவரான அசார் மஃமூட் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக அணியில் சேர்க்கப்படாமல் உள்ளார். தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதால் அவர் அந்த நாட்டுத் தேர்வு குழுவினர் மீது பாய்ந்து இருக்கிறார்.

இது தொடர்பாக அசார் மஃமூட் கூறும்போது பாகிஸ்தான் வீரர்கள் தேர்வில் பல்வேறு குழப்பங்கள் இருக்கிறது. என்னை எதற்காக சேர்க்க மறுக்கிறார்கள் என்பது விளங்கவில்லை என்றார்.

## நியூஸிலாந்துடனான 2 ஆவது டெஸ்ட் 248 ஓட்டங்கள் பெற்றது இங்கிலாந்து



(ஹெடில்லே)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் இறுதியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றது.

ஹெடில்லேயில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்ஸில் நியூஸிலாந்து அணி 409 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

நியூஸிலாந்து அணி சார்பில், றிச்சட்சன்- 13, பப்ஸ் 86, பிளெமிங் - 97, அஸ்லே - 02, ஸ்ரைறிஸ் 21, ஓரம் - 39, கெயின்ஸ் - 41, மக்கலம் - 54, விற்ரோறி - 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து வீரர் ஹர்மிசன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கோகாட், பிளின்ரொவ், காகர்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் திரஸ்கோதிக்கும், ஸ்ரைஸிம் நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது, இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து, 248 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

திரஸ்கோதிக் 19 பவுண்டரிகளுடன் 132 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரைரஸ் - 62, பவுச்சர் - 4 வோகன் 13, ஓட்டங்களைப்



பெற்றனர்.

தோர்ப் 7 ஓட்டங்களுடனும், பிளின்ரொப் 4 ஓட்டங்களுடனும் விளையாடிக்கொண்டிருந்தனர். பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் ஸ்ரைறிஸ் 2 விக்கெட்டுக்களையும், விற்ரோறி இரண்டு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

## கிரேக் சப்பலின் சேவையை பாகிஸ்தான் பயன்படுத்தும்!

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட்டின் ஜாம்பவானான கிரேக் சப்பலின் சேவையைப் பாகிஸ்தான் கிரிக்கெட் பல்வேறு வழிகளில் பயன்படுத்திக் கொள்ளும் என்று, பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் ஆலோசகராக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரரான கிரேக் சப்பல் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதம் சப்பல் லாகூர் வர உள்ளார். இந்த நிலையில் தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு மட்டும் சப்பலின் சேவை பயன்படுத்திக் கொள்ளப்படமாட்டாது என்றும், பாகிஸ்தான் கிரிக்கெட் சிரேஷ்ட் மற்றும் ‘ஏ’ அணிகளுக்கு உதவவும் சப்பல் பயன்படுத்தப்படுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட்சபை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி கூறியிருப்பதாவது - சப்பலின் உதவி தேசிய கிரிக்கெட் அக்கடமியுடன் நிறுத்தப்பட்டுவிடாது, சிரேஷ்ட ‘ஏ’ அணியின் பயிற்சி முகாம்களுக்கும், அணி நிர்வாக விடயத்தில் ஆலோசனை பெறவும், அவரது சேவை பயன்படுத்தப்படும். சப்பல் வழங்கும் பரிந்துரைகளும், ஆலோசனைகளும் செயற்படுத்தப்படுவது எப்படி? என்பதை கிரிக்கெட் சபை தான் முடிவு செய்யும் என்றும் கூறினார்.

ஒரு வருடத்தில் 30 நாட்கள் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு ஆலோசனை வழங்கும் ஒப்பந்தத்தில் சப்பல் கையெழுத்திட்டுள்ளார். எத்தகைய வழியிலும் இந்த 30 நாட்களும் சப்பலின் சேவையை பாகிஸ்தான் கிரிக்கெட் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்த நிலையில் நாள் ஒன்றுக்கு சப்பலுக்கு சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்படவுள்ளதாக வெளியான செய்தியை அந்த அதிகாரி மறுத்தார். இந்தச் செய்தி முட்டாள்தனமானது என்றும், இது மிகவும் குறைவான சம்பளம் என்றும் பிற அணிகளின் பயிற்சிக்காகக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட அதிகமாகவே சப்பலுக்குக் கொடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

16 நாட்கள் பயணமாக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பந்துவீச்சுப் பயிற்சியாளர் டேரிஸ் போஸ்டர் வரும் 24 ஆம் திகதி பாகிஸ்தான் வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## ஆசியகிண்ண ஒருநாள் போட்டி; அக்தர் நீக்கத்துக்கு விளக்கம்!

(இஸ்லாமாபாத்)

எதிர்வரும் மிக முக்கிய போட்டிகளைக் கருத்திற்கொண்டு சொகைப் அக்தருக்கு ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்று முடிந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொடரின் 3 ஆவது டெஸ்ட் போட்டியின் 3 ஆவது நாளின்போது அக்தர் களம் இறங்கவில்லை. முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக அக்தர் விளையாடவில்லை. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சை பாகிஸ்தான் கிரிக்கெட்டையே ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

அக்தர் உட்பட சில வீரர்கள்மீது மருத்துவ விசாரணை நடத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை இப்போது ஓய்ந்துள்ள நிலையில், மற்றொரு பிரச்சினை எழுந்துவிடக்கூடாது என்பதில் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை மிகவும் எச்சரிக்கையாகவுள்ளது.

ஏனெனில், வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இருந்து அக்தர் விலகியுள்ளார். இதனால், சர்ச்சை எழுந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உடற்தகுதி விடயம் காரணமாக மட்டுமே அக்தர் ஆசிய கோப்பையில் விளையாடவில்லையே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் முக்கிய போட்டிகளைக் கருத்திற் கொண்டு ஆசியக் கிண்ணத்திலிருந்து அக்தருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ரஷ்ய வீராங்கனை மிஸ்கினா மகளிர் பிரிவில் சம்பியன்!

பிரெஞ்சு ஓபன் ரெனிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை ரஷ்யாவின் அனஸ்தாசியா மிஸ்கினா கைப்பற்றினார்.



வருடத்தின் இரண்டாவது கிரான்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகள் பாரிஸில் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த வீராங்கனைகளான அனஸ்தாசியா மிஸ்கினா, எலினா டெமன்ட்டியேவா இருவரும் மோதினர்.

இந்தப் போட்டியில் 6-1, 6-2 என்ற செட் கணக்கில் மிஸ்கினா வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

இது இவருக்கு முதல் கிரான்ட்ஸ்லாம் பட்டமாகும். மேலும் 30 வருடங்களுக்குப் பின்னர், கிரான்ட்ஸ்லாம் பட்டத்தை முதன்முறையாக ரஷ்ய வீராங்கனை ஒருவர் கைப்பற்றியுள்ளார். இறுதிப்போட்டியில் 59 நிமிடங்களில் மிஸ்கினா வெற்றிபெற்றார்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றதன் மூலம் மிஸ்கினாவுக்குச் சுமார் 12 கோடி ரூபாய் பரிசுத்தொகையாக கிடைத்தது. ரன்னர் அப் பட்டம் வென்ற மற்றொரு ரஷ்ய வீராங்கனையான டெமன்ட்டியேவாவிற்கு சுமார் 5 கோடி ரூபாய் பரிசுத்தொகை கிடைத்துள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் டெமன்ட்டியேவாவே வெற்றிபெறுவார் என்று இறுதிப்போட்டிக்கு முன்னர் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதையெல்லாம் பொய்யாக்கும் விதமாக இறுதிப் போட்டியில் தனது ஆதிக்கத்தை முழுமையாகச் செயற்படுத்தி மிஸ்கினா அபார வெற்றி பெற்றார். இறுதிப்போட்டியில் மிஸ்கினாவின் சவாலை எதிர்கொள்ளமுடியாமல் டெமன்ட்டியேவா திணறிப்போனார்.

## தீவக வலய பாடசாலைகளில்
# சுகாதார வசதிகளை ஏற்படுத்த யுனிசெப் நிறுவனம் நிதியுதவி

(ஆழியவளை)

தீவக கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சுகாதார, குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யூனிசெப் நிறுவனம் 25 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இந்தக் கல்வி வலயத்தில் உள்ள 115 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட கல்வித் திணைக்களத்தினதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் ஒத்துழைப்புடன் குடிநீர்த்தாங்கிகள் அவற்றிற்கான நீர் ஏற்றும் இயந்திரங்கள் மற்றும் மலசல கூடங்கள் என்பன அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயம், நயினாதீவு சிறி கணேசா வித்தியாலயம், வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை, ஊர்காவத்துறை செக்கிறியம்பலம் அ.த.க. பாடசாலை, புங்குடுதீவு சிறீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், மண்கும்பான் அ.த.க. பாடசாலை, புங்குடுதீவு காமலாம்பிகை வித்தியாலயம், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், நாரந்தனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை, காரைநகர் ஊரி அ.த.க. பாடசாலை, கரம்பன் சண்முகநாதன் வித்தியாலயம், புங்குடுதீவு சிறி கணேசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே மேற்படி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

(122)

## விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினரின்
# அகிம்சை வழிப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களால், நாளை மறுதினம் மேற்கொள்ளவெனத் திட்டமிடப்பட்டிருந்த அகிம்சை வழிப்போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

தமது கற்கைநெறியைத் தரம் உயர்த்துமாறு கடந்த 27ஆம் திகதியன்று தனது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் அன்றைத் துணைவேந்தருக்கு அனுப்பியதுடன் செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தனர். இதனையடுத்து, துணைவேந்தரின் பணிப்பின் பேரில், மேற்படி கற்கை நெறியை 3 வருடமாக உயர்த்துவதற்கு கொள்கை அளவில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நாளைமறுதினம் மேற்கொள்ளத்திட்டமிட்டிருந்து அகிம்சை வழிப் போராட்டத்தைக் கைவிட்டதாக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைவிலகிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு


(ஆழியவளை)

விசுவமடு தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் 132 இடைவிலகிய மாணவர்களுக்கு யூனிசெப் நிறுவனத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

விசுவமடுப்பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இயங்கி வரும் இந்தப் பாடசாலைக்கு யூனிசெப் நிறுவனத்தினர் வழங்கிய இந்த உதவியானது பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீள இணைப்பதற்கான ஒரு ஊக்குவிப்பாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு மாணவனுக்கும் சுமார் 300ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் யூனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(122)



*வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை பெண்மணி ஒருவருக்கு காது கேட்கும் கருவியை வழங்குவதையும் அருகில் சமூகசேவை உத்தியோகத் தர் த.கிருபாகரன், கிராம அலுவலர் திரு. நடராசா ஆகியோரை படத்தில் காண்க.*

(17)

# கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர் நாடக, பாட்டுப் போட்டிகள்

மாவட்ட மட்ட சிறுவர் நாடகப் போட்டியும், பாட்டுப் போட்டியும் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது. "சிறுவர்களின் பராயம் பெரியவர்களால் பறிக்கப்படுகிறது", "இன்றைய சிறுவர்களே எதிர்கால மன்னர்கள்" எனும் கருப்பொருளில் இடம்பெறவுள்ள இப்போட்டிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நாடகப் போட்டிக்கு வயதெல்லை இல்லை. 15-20 நிமிடத்திற்குள் அமையவேண்டும் 10 பேருக்கு உட்பட்டவர்களே இதில் பங்குபற்ற முடியும். போட்டியில் பங்கு பற்றுவோர் ஜூலை 10ஆம் திகதிக்கு முன் நாடகப் பிரதிகளை யாழ். கியூடெக் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒலி நாடாக்களில் பதிவதற்கான பாட்டுப் போட்டியும் இடம்பெறவுள்ளது. இது தனி நபர் போட்டியாக நடைபெறும். இதில் தெரிவு செய்யப்படுவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்குவதுடன் தேசிய மட்டப் போட்டிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவர்.

சிறந்த நடிகர், நடிகை சிறந்த மேடை அமைப்பு, சிறந்த இசை இவற்றுக்கான தெரிவுகளும் இடம்பெறும். மாவட்ட மட்டப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் கொழும்பில் இடம் பெறும் தேசிய மட்டப்போட்டிகளிலும் பங்கு கொள்வார்கள்.

முதல் மூன்று இடங்களுக்கு பத்தாயிரம், ஏழாயிரம், ஐயாயிரம் ரூபா பணப் பரிசுகளும் மாவட்ட மட்டப் போட்டியில் வெற்றி பெறுவர்களுக்கு வழங்குவதுடன் மேலதிக தெரிவுகளுக்குக் தனித் தனியே பணப்பரிசு வழங்கப்படவுள்ளதெனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(91)

### வரணி மகா வித்தியாலயத்தில் தையல் பயிற்சி

(வடமராட்சி)

கல்வித் திணைக்கள முறைசாரா கல்வி பிரிவு வரணி மகா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்களுக்கான தையல் பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளது. இப்பயிற்சிநெறியை அதிபர் என். சுப்பிரமணியம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதில் சுமார் 70 மாணவிகள் இரு பிரிவாக தையல் பயிற்சி நெறியை மேற்கொண்டு வருகின்றனர்.



*திருகோணமலையில், டெனிஷ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள முன்பள்ளி பாடசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட டெனிஷ் அகதிகள் பேரவையினரைப் படத்தில் காணலாம்.* (படம் - சசிகுமார்)

# தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்கான பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி 2001 / 2002, தொழிலாளர் கற்கை நெறி டிப்ளோமா கற்கை நெறி - 2001 - 2002 பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி அன்று ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# கல்வியிழந்த மாணவர்கள் குறித்து கலந்துரையாடல்

யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை இழந்த மாணவர்கள் குறித்து மாகாணக் கல்வி அமைச்சு எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள 24 கல்வி வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் இந்தக் கலந்துரையாடலுக்கு கட்டாயமாக சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தலைமையில் திருகோணமலையிலுள்ள கல்வியமைச்சின் அலுவலகக் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

யுனிசெப் பிரதிநிதிகளுடனான இந்த கலந்துரையாடலில் இடைவிலகல் மற்றும் பாடசாலைக்குச் செல்லாதோர் தொடர்பான தகவல்கள் அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(44)

# நெடுந்தீவு மேற்கில் வீதிகள் புனரமைப்பு

நெடுந்தீவு மேற்கு பனங்காணி களமுனை வீதி 0.4 மில்லியன் ரூபா செலவில் வீதிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்படவுள்ளது.

ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதியே தற்போது புனரமைக்கப்படவுள்ளது. இந்த வீதி புனரமைப்பின் மூலம் பல தொழிலாளர்களும், பொது மக்களும் இதுவரை நாளும் சீரான வீதியின்றி அடைந்த சிரமங்கள் தீர்த்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

# சின்னஞ்சிறு செய்திகள்

### தொகை மதிப்பீடு தொடர்பான அவசர கூட்டம்

(சுதுமலை)

யாழ். கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தொகை மதிப்பீடு தொடர்பான அவசர கூட்டமொன்று புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு பாடசாலை அதிபர்கள் சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் சரிபார்க்கும் ஆசிரியர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். கோட்ட தமிழ் திறன் போட்டிகளை முன்னிட்டு, பாடசாலை மட்ட தமிழ்த்திறன் போட்டி முடிவுகளை வரும் 15ஆம் திகதிக்கு முன் யாழ். கோட்டக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

(91)

### சமகால அரசியல் கருத்தரங்கு

(வடமராட்சி)

தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 9ஆவது தொடர் நாளை பி.ப. 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் "திட்டமிட்ட தமிழர் கலாசார பிறழ்வுக் பற்றிய ஒரு பார்வை" எனும் தலைப்பில் வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் கருத்துரை வழங்கவுள்ளார்.

### வலி. கிழக்கு பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை

வலி. கிழக்கு பிரதேச செயலகத்தினூடாக பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் யூன் 09, 10, 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது எனவும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் யாவும் ஏற்கனவே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் வலி. கிழக்கு உதவிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

### திரைப்பட கலைஞர்களுக்கு நட்டஈடு

1983 ஜூலையில் நடைபெற்ற இனவாத வன்செயலின் பொழுது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளதாக அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலுக்கிணங்க, உயிர், உடையை இழப்பு உட்பட அனைத்துவித பாதிப்புக்கும் ஆளான திரைப்படத் துறையைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் கலைஞர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரிக்க சலனசித்திரம் அமைப்பு முன்வந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் உரித்துள்ள உறவினர்கள் உடனடியாக சலனசித்திரம் த.பெ. இல. 37, தெஹிவளை எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பத்தாவது அகவையில்



பெயர் : செ.கஜீவன்
முகவரி : நெடுந்தீவு மேற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




## பொக்கிசம்

தன்னுடைய இலக்கிய வாழ்வின் தொடக்கத்தைப் பற்றி அ.செ.முருகானந்தன் பின்வருமாறு கூறுகின்றார். நான் பிறந்து வளர்ந்த குடும்பம் ஓரளவு பெரியது. அக்குடும்பத்தில் உளளவர்கள் எல்லோரும் கலையார்வம் கொண்டவர்கள். இதனால் நான் இளமையைக் கழித்த அந்தமனை எந்த வேளையிலும் கலகலப்பாக இருக்கும். இசையும் ஓவியமும் அக்குடும்பத்தின் பரம்பரைச் சொத்துக்கள். என் பாட்டியும் அன்னையாரும் ஓய்வு நேரங்களில் புராண இதிகாச கதைகளை வாசிப்பார்கள். கல்லூரிக் கல்விகற்றுக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்து இளைஞர் ஒருவர்தான் கற்று வந்த பாடத்திலிருந்த கதைகளை மிக அழகாக எடுத்துக் கூறி என்போன்ற இளைஞர்களை களிப்பூட்டுவார். இத்தகைய சூழலிலேதான் வளர்ந்தேன். இதனால், என்னிடத்தே கதைகளைக் கற்பனையில் எழுதவேண்டும் என்ற ஆவல் முளைகொண்டுவிட்டது.

அ.செ.முருகானந்தன் எத்தகைய சூழலில் படைப்பாளியானார் என்பதை மேற்கூறிய கூற்றுத் தெளிவாக்கும். கல்லூரி மாணவனாக இருந்தபோதே தமிழகத்தில் வெளியான ஆனந்த போதினி சஞ்சிகையில் கண்டிக்கடைசி அரசன் என்ற உரைச்சித்திரத்தை எழுதினார். 50 ஆம் ஆண்டுகளிலேயே தேசிய சமுதாய அரசியற் பிரச்சினைகளைத் தன்னுடைய எழுத்தில் உள்ளடக்கமாகக் கொண்டு எழுதியவர் அ.செ.முருகானந்தன்.

அ.செ.முருகானந்தன் பல பத்திரிகைகளில் பணியாற்றிய போதிலும் அவருடைய ஆக்கங்கள் நீண்ட காலமாக நூலுருவம் பெறாதது ஈழத்து இலக்கியத்துக்குப் பெரிய இழப்புத்தான். அவருடைய புகையில் தெரிந்த முகம் தவிர ஆரம்பகால வாசகர்களிடையே அவரது எந்த நூலும் அறிமுகமாகவில்லை. புகையில் தெரிந்த முகமும் **OFF Print** ஆக வெளிவந்தது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அ.செ.முருகானந்தனுடைய சிறுகதைகளில் ஒரு எதிர்க்குரல் இருக்கின்றது. இதுவே அவருடைய இலக்கிய ஆளுமையாகும்.

மிக இளமைப் பருவத்திலேயே அ.செ.முருகானந்தன் இலக்கியத்தில் நெருக்கமாகிவிட்டார். தமது ஊரான அளவெட்டியில் ஒரு படிப்பகத்தை நிறுவி, மறுமலர்ச்சி என்ற கை எழுத்து இதழையும் அவர் நடத்தினார். 1940 ஆம் ஆண்டிலேயே தெளிந்த இலக்கிய சிந்தனையை அவரிடமிருந்து காணக்கூடியதாக இருந்தது. தமிழ் உணர்வும் அதேவேளையில் சமுதாய விழிப்புணர்வும் அவரது சொல்லிலும் செயலிலும் வெளிப்பட்டன. ஈழமணி என்ற பத்திரிகையில் வெளியான அவரது கட்டுரைகள் இளந்தலைமுறைக்குப் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தியது.

1945 ஆம் ஆண்டு தொடக்கம் மறுமலர்ச்சிச் சஞ்சிகையின் இணை ஆசிரியராக அவர் இருந்து, பிறப்போக்குத் தனங்களுக்கு எதிராக எழுதிய எழுத்துக்கள் அக்காலத்து இளம் தலைமுறைக்கு மட்டுமல்ல, இன்றைய வாசகர்களுக்கும் உற்சாகத்தைத் தருவன.

அ.செ.முருகானந்தன் இலக்கிய ஆக்கங்களாக முழுமையான தொகுப்புக்கள் எதுவும் வெளியாகாமல் போனது ஈழத்தமிழ் இலக்கியத்தில் அவருடைய பாத்திரத்தைச் சரியாக அடையாளம் காட்ட முடியாமல் செய்துவிட்டது என்பது இங்கே பதிவு செய்யத் தக்கது.

'மனிதமாடு' தொகுதியே பேர் கூறி நிற்கின்றது.

அ.செ.முருகானந்தன் ஒரு முழு நாவலையும் ஐநூறு கட்டுரைகளையும், நூறு சிறுகதைகளையும், ஒரு குறுநாவலையும், ஐந்து மொழிபெயர்ப்புக்களையும், பத்து இலக்கிய நாடகங்களையும் எழுதியுள்ளார். எரிமலை, மறுமலர்ச்சி ஆகிய பத்திரிகைகளை நடத்தியுள்ளார். ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு ஈழமணி ஆகிய பத்திரிகைகளில் கடமையாற்றி இருக்கிறார்.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் 1943 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக அ.செ. முருகானந்தனே தெரிவு செய்யப்பட்டார். இவர் பீஸ்மன், யாழ்ப்பாடி, முருகு, யாழ்தேவி, நீலாம்பரி, கதிரவன், காங்கேயன், மயிற்புரவம், சோபனா, இளவேனி, பூராடன், தனுசு, மேகலை, கத்திரிக் குறளி, போர் வீரன், வள்ளிதாசன் என்ற புனைபெயர்களிலும் எழுதினார்.

1940 - 50 களில் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற பெயரில் உருவாகிய இலக்கிய இயக்கத்தில் தி.ச.வரதராசன், கனகசெந்திநாதன் ஆகியோரோடு இவர் சேர்ந்து பணியாற்றினார். இந்த இலக்கிய இயக்கமே மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையையும் வெளியிட்டது.

ஆழ்ந்த மனித நேயமும் சிந்தனைத் தெளிவும் நிறைந்த அ.செ.முருகானந்தனின் வாழ்க்கையின் கடைசிக்காலம் துயர் நிறைந்ததாக அமைந்தது. தாயின் மேல் கடைசிவரை ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த அவர் வயோதிப விடுதியில் தன்னந்தனியனாக இருந்து ஒரு குழந்தையின் மனதோடு காலமானார் என்பது மகத்தான சோகம்தான்.

**செ.யோகநாதன்**

# காளிமுத்துவின் பிரஜா உரிமை

சிறுகதை

**அ.செ.முருகானந்தன்**



இலங்கையின் சமூகப் பொது வாழ்வில் காளிமுத்து பிரமாத சேவைகள் புரிந்துவிட்டதாக அப்படி ஒன்றும் பிரமாதப்படுத்தவில்லை. அதனால், இலங்கையின் கௌரவம் பிரஜையாக அரசாங்கம் அவனை ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியாகத்தான் இலங்கை மண்ணில் அவன் வாழ்ந்தான்.

காளிமுத்துவின் குடும்பம் ஒரு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து, மலைநாட்டை வாழவைத்து, அந்த மூதாதைகளின் வியர்வையில் செழித்து வளர்ந்துதான் இன்று ராஜகிரித் தோட்டம் கம்பீரத் தோற்றம் கொண்டு குளுகுளுவென்று நிற்கிறது. ஏன், உண்மையைச் சொன்னாலென்ன, மலைநாடு இன்றைக்கெல்லாம் மலைபோல நிமிர்ந்து நிற்பது இந்தியப் பாட்டாளிகளின் உழைப்பின் மீதுதான்.

பிரிட்டிஷ்காரன் இலங்கையில் கோப்பிச்செடி பயிரிடத் தொடங்கிய காலத்திலேயே காளிமுத்துவின் முற சந்ததிகள் தோட்டத் தொழிலாளிகளாக இலங்கையில் குடியேறினார்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமை பற்றிய பேச்சு ஊரில் அடிபட்டபோது, ராஜகிரித் தோட்டத்தை இலங்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போகிறதென்றும், இலங்கைப் பிரஜைகளாயுள்ளவர்களே மட்டுமே இது வேலைக்கமர்த்துமென்றும் பிரஜாவுரிமை பெறாத இந்தியர்களை இந்தியாவுக்கே அனுப்பி விடப் போகிறதென்றும் ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள் ஆகவேண்டிய அத்தாட்சிகள் காட்டித் தங்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் காளிமுத்துவுக்குத் தகவல் கிடைத்தது.

தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது வேறு ஏதாவது அரசியல் கூத், தடிப்பதற்கோ அவன் பிரஜாவுரிமைக்கு ஆசைப்படவில்லை. அவன் கவலைப்பட்டதெல்லாம் வருங்காலச் சந்ததிகளாக விளங்கவிருக்கும் அவனது பிள்ளை குட்டிகளை எண்ணித்தான்.

காளிமுத்துவுக்கு மனைவியும், தாயும், மூன்று பிள்ளைகளுமுண்டு. குளுகுளுவென்று மலைச் சுவாத்தியத்திலே முனசிங்காவுக்கும், அப்புஹாமிக்கும் பிறந்த குழந்தைகளைப் போலக் குவாகுவா என்று கத்திக்கொண்டுதான் அவைகளும் பிறந்தன. உடலின் வலுவைப் பிழிந்து உழைத்த இத்தனை காலத்திலும் காளிமுத்துவுக்கு மிஞ்சிய தேட்டம் - சம்பாதியம் - இதுதான் ஐந்து ஜீவன்கள் கொண்டதொரு பெரிய குடும்பம்.

இந்தக் குடும்பப் பளுவோடும் தளர்வடைந்த கைகளோடும் இனிமேல் இந்தியாக் கரைக்குப்போய் அவனால் என்ன செய்ய முடியும்? பிள்ளை குட்டிகளின் வருங்காலத்துக்குத்தான் அங்கு எந்த வழியை வகுப்பது?

ஆகவே, பிரஜாவுரிமை பெறுவதற்கான மார்க்கத்தைக் காளிமுத்து தேடத் தொடங்கினான். இதற்காக அங்குமிங்கும் சிந்தனைகளும், ஆசைகளும் உண்டாயின. தேயிலைக் காட்டுக்குள்ளே உரிமையற்ற அநாமதேயமாக அவனது பிரேதம் புதைக்கப்படுவதை நினைத்தாலும் அவனது மனம் சற்றே வேதனைப்படத்தான் செய்தது. இத்தனை காலமாக வாழையடி வாழையாய் வாழ்ந்து பாடுபட்டபின் சாகும் பொழுதாவது வாயில்லாப் பூச்சியாகச் சாகாமல் வாக்குரிமை பெற்றுச் சாகக்கூடாதா? என்று ஒரு ஆசை அவன் மனதில் ஒரு மூலையில் இல்லாமல் போகவில்லை. ஆனால், அதை அவன் வெளியே சொல்லுவானா! ஒரு தோட்டத் தொழிலாளியின் ஆசைக்குப் பெறுமதி...?

காளிமுத்து படி ஏறிய இடங்களில் பிரஜாவுரிமை கிடைப்பதற்குப் போதிய அத்தாட்சிகள் காட்ட வேண்டுமென்று அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், "அங்கே அவரைப் போய்க்காணு. இங்கே இந்தத் துரையைக் கண்டு பேசு" என்று அங்குமிங்குமாய்ப் பல தடவை அவனை அலைக்கழித்தார்கள். இலங்கைவரும் இந்தியர்கள் இப்படியான நிலைமைகளில் அபூர்வமான சகிப்புத்தன்மையோடு நடந்து கொள்ள மண்டபம் 'முகாமிலேயே' பழகிக் கொண்டு விடுகிறார்களாதலால் காளிமுத்து பொறுமையோடு அங்குமிங்கும் போய் அவரையும் இவரையும் பதினாறு தடவைக்கு மேல் பார்த்தான். பார்த்தும் பயனென்ன?

"அத்தாட்சி வேண்டும், பிறப்புப் பத்திரங்கள் காட்டவேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள். வெள்ளைக்காரத் தோட்டம் சூப்ரண்டன் ஆட்சியின் அத்தாட்சிக்கு அவன் எங்கு போவான். பிறப்புப் பத்திரங்களுக்குத்தான் எங்குபோவான்.

ஐயா எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கறுப்பையா என்று பெயர்வைச்சிருக்கோம். எழுதிக்கொள்ளுங்கோ. எஜமான் என்று தோட்டச் சூப்ரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போதே அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துக் கிளார்க்துரை என்னடா கறுப்பையா எப்போடா ஐயாவானே சின்னக காளிமுத்து என்று சொல்லடா என்று அதட்டி சீ.கா மட்டும் போட்டு விடயத்தை முடித்து விடுவான். இந்த நிர்வாக லட்சனத்தில் அங்கே பிறப்புப் பத்திரங்களா இருக்கும். ஆனால் பதிவு உத்தியோகத்தர்கள் என்னமோ பிறப்புப்பத்திரங்களைக் கேட்கத்தான் கேட்டார்கள். அத்தாட்சி கொண்டுவா என்று கூச்சல் போடத்தான் போட்டார்கள்.

"கைப்பூணுக்குக் கண்ணாடியிலா அத்தாட்சி காட்டவேணும் ஐயா? அதோ பாருங்கள், எங்கள் கைபட்டு, எங்களது சொந்த வியர்வையும் இரத்தமும் பாய்ச்சி, சந்ததி சந்ததியாக நாங்கள் பண்படுத்தி வந்த தோட்டங்களை" என்று சொன்னால் அது செவியில் ஏறமாட்டாது.

"அதற்கு அத்தாட்சி...' காளிமுத்து சோர்வடைந்தான்.

'கடல் கடந்த இந்தியரின் உழைப்பைத்தான் அரசாங்கம் காட்டில் எறிந்த நிலவைப்போல இந்தமாதிரி ஒதுக்கிவிடுகிறதென்றால், அவர்கள் பகலுமிரவும் வெயிலும் மழையும் காடும் மலையும் பார்க்காமல் பாடுபட்டதெல்லாம் தான் தண்ணீரில் கரைந்த புளிபோலப் போய் விடுகிதென்றால், அந்தத் துர்பாக்கியசாலிகள் பிறப்பு, இறப்பு இல்லாத அசேதனப் பொருள்களாகவுமா ஆகிவிட்டார்கள்? என்று காளிமுத்துவின் நெஞ்சம் கலங்கியது.

"வாருங்கள் அத்தாட்சி காட்டுகிறேன்" என்று வாக்குப் பதிவு உத்தியோகஸ்தர்களைக் காளிமுத்து ஒரு தினம் வீட்டில் பின் பக்கமாய், தேயிலைக் காட்டுக்குள்ளே அழைத்துச் சென்றான். உயர்ந்து வளர்ந்த அரசங்கன்று ஒன்று அங்கே நின்றது. அதைச் சுற்றிவர உத்தியோகத்தர்களை நிற்கும்படி கேட்டுக்கொண்டு காளிமுத்து கையோடு எடுத்துச் சென்ற கோடரியைக் கொண்டு அதை வெட்டத் தொடங்கினான்.


காளிமுத்து உணர்ச்சிவசப்பட்டிருந்தான் என்பது அவனுடைய ஒவ்வொரு காரியங்களிலும் தென்பட்ட பதட்டத்திலிருந்து தெரிந்தது. உத்தியோகத்தர்களுக்கு கோடரியையும் காளிமுத்துவின் பதட்டத்தையும் பார்த்துகொஞ்சம் யோசனைதான் என்றாலும் பேசாமல் நின்றார்கள்.

அரசங்கன்றை அடிமரத்தோடு வெட்டி விழுத்திவிட்டு மண்ணுக்கு கீழே புதையுண்டிருந்த மரத்தின்வேர் பாகத்தை அவன் கிழப்பத்துடங்கினான்.

பதவி உத்தியோகத்தர்களுக்கு இதெல்லாம் விசித்திரமாகத் தோன்றிற்று ஆனாலும், முடிவு என்னவென பதை அறியும் ஆவலில் பேசாமல் நின்றார்கள். 'பிறப்புப் பத்திரங்களை ஒரு சமயம் மண்ணுக்குள்ளே புதைத்து வைத்திருக்கின்றானோ? பைத்தியக்காரர்'. என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அரச மரத்தின் அடிப் பாகமும் வெளியே கொண்டுவரப்பட்டாயிற்று. நிலத்தில் மூன்றுமுழ ஆழத்திற்கு மேலே காளிமுத்து கிடங்கு தோண்டிவிட்டான். மேலும் தோண்டிக் கொண்டேபோனான். பதிவு உத்தியோகத்தர்கள் சற்றே பொறுமையிழந்தார்கள். 'யாருக்கப்பா குழி தோண்டுகிறாய்?' என்று கிண்டல் பண்ணினார்கள்.

மண்வெட்டியில் ஏதோ ஒரு கடினமான பொருள் தட்டுப்படவே காளிமுத்து பரபரப்பாகவே குனிந்து மண்ணை கிளறி அதை எடுத்தான். அது ஒரு கல்லு. 'இது என்ன சனியன் இதுக்குள்ளே' என்று வெறுப்போடு தலையை சுழற்றி மேலே வீசினான். அதுமேலே



நின்ற உத்தியோகத்தர் தலையில் லொடக்கென்று விழுந்தது. 'ஏ, வெளியே ஆட்கள் நிற்பது தெரியவில்லையா?' என்று ஒரு அதட்டல்.

காளிமுத்து மேலும் கிடங்கைத் தோண்டினான் இப்பொழுது மண்ணுக்குள்ளே இன்னொன்று பளிச்சிட்டது. புளுப்போல சுருண்டுபோய்க் கிடந்த அதை அவன் எடுத்து குலைத்தான். அதைப்பார்த்தபோது அவன் கண்கள் கலங்கின. அது ஒரு வெள்ளி இடுப்புக்கொடி. கண்ணிலே ஒற்றிக்கொண்டு மடிக்குள்ளே அதைப் பத்திரமாகச் செருகிவைத்தான். குழி இப்பொழுது அவன் தலையை மறைத்தது. உத்தியோகத்தர்களுக்கு நின்று கால் சோர்ந்து போயிற்று. சற்றே பின்பக்கமாக விலகி வெட்டி வீழ்த்திய அரசங்கன்றுக் கிளைகளின் மீது உட்கார்ந்தார்கள்.

இருந்தாற்போலிருந்து காளிமுத்து துள்ளிக்குதித்தான். 'இதோ அத்தாட்சி கிடைத்துவிட்டது. நான் இலங்கையின் பிரஜை. அதுக்கு இதைவிட இன்னும் என்ன அத்தாட்சி கேட்கிறீர்கள்?' என்று எங்கோ கிணறறிலிருந்து வருவது போல அவனது குரல் கேட்டது. அதைத் தொடர்ந்தாற்போல மண் பிடித்த பொருளொன்று வெளியே உத்தியோகத்தர் முன்பாக வந்து விழுந்தது. அவர்கள் ஆவலோடு ஓடிப்போய் அதை எடுத்துப் பார்த்தார்கள்.

அது ஒரு மனித பிரேதத்தின் கையெலும்பு. 'ஐயா துரைமார்களே இது என் பாட்டனாரின் கையெலும்பு எத்தனையோ வருடங்களுக்கு முன்னே அவர் இங்கு புதைக்கப்பட்டார். என்னை இலங்கை பிரஜையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லையென்றால் என்னை இந்தக் குழியிலே வைத்து உங்கள் கையினாலேயே தள்ளிவிட்டு, புதையுங்கள்'. என்று காளிமுத்து மறுபடியும் சத்தம் வைத்தான்.

காளிமுத்துவின் பாட்டனின் கையெலும்பை உத்தியோகத்தர்கள் கையில் எடுத்தபோது அவர்களுக்கு ரோமம் புள்ளரித்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

'பாவம், அவனுக்கு பைத்தியம் தான் பிடித்திருக்கிறது' என்று அவர்களில் ஒருவன் சொல்லிக்கொண்டு வெளியேறினான். மாட்டுக்குப் பின் வால்போலச் சகல உத்தியோகத்தர்களும் அவனை பின்தொடர்ந்தார்கள். வெட்டிவீழ்த்திய அரச மரத்தின் இலைகள் அப்போது வீசிய மலைக் காற்றுக்கு சலசலக்கவில்லை அவை வாடிப்போய்விட்டன. *

## நூல் அகம்



நுண்ணறிவு IQ FOR ALL என்னும் பெயரிலான நூல் ஒன்று வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் இலங்கை மருதானை தொழில் நுட்பக் கல்லூரியின் விரிவுரையாளர் உமாசங்கர் ஆவார்.

இந்த நூல், ஆசிரியரின் பதினேழாவது நூலாகும். நல்லூர் அரியாலை சயன்ஸ் அக்கடமியால் அழகாக வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் வேலை வாய்ப்பு கருதி நடத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சைகள் தொழில் பெறுவதில் உள்ள போட்டியை அதிகரித்துள்ளன.

தொழில் ஒன்றைப் பெற்றுவிடுவது சாதாரண விடயமாக தற்போது காணப்படுவதில்லை. பாடசாலைக் கல்வியிலும் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்விகளிலும் பெற்ற அறிவு தொழில் பெறுவதற்கு ஏற்றதல்ல என்ற வகையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் நிறுவனங்கள், துறைகள் கருத்துக் கொணடிருக்கின்றன.

இத்தகைய கருத்துக்களினால், ஆசிரியரை நியமிப்பதற்கு அரசு ஆசிரியர் போட்டிப்பரீட்சையை நடாத்துகின்றது. கிராமசேவையாளர், கணக்காளர் வேலை என்பவற்றில் ஆட்களைச் சேர்க்கும் வகையில் போட்டிப்பரீட்சைகளை நடாத்துகின்றது. இவற்றைவிட பல்வேறு நுண்ணறிவுப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. தடைதாண்டல் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

இத்தகைய போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்ள இருப்பவர்கள் தமது கைகளில் பட்டச்சான்றிதழ்களை மட்டும் வைத்துக்கொண்டிருப்பார்கள். தத்தமது பாடத்திட்டங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களை விட்டால், அவர்களுக்கு வேறு எதுவும் தெரியாமல் இருக்கும்.

போட்டிப் பரீட்சையின்போது கேட்கப்படும் வினாக்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது அவர்களுக்கு புரியாமல் இருக்கும் ஒரு வினாவுக்கு உரிய விடையை அளிப்பதற்கு எத்தனை நிமிடங்களை செலவழிக்கவேண்டும் என்பதை அறியாமல் சில வினாக்களுக்குரிய விடைகளை அளிக்கமுன்னரேயே போட்டிப் பரீட்சைக்குரிய நேரம் முடிவு பெற்றுவிடும். இத்தகையதொரு நிலையை தவிர்த்துக்கொள்வதற்கு போட்டிப் பரீட்சைகளில் கேட்கப்படும் வினாக்கள் தொடர்பாக அறிந்து வைத்திருத்தல் அவசியமானது.

சகல போட்டிப் பரீட்சைகளிலும் கேட்கப்படுகின்ற வினாக்களுக்கு ஏற்றவகையில் வினாக்கட்டமைப்பு விளக்கம், இலகுவில் விடைகளை பெறக்கூடிய நுட்பங்கள், உதாரண விளக்கங்கள், பயிற்சி வினாக்கள், செய்முறைகளுடன் கூடிய விடைகள் என்பன விரிவாக உள்ளடக்கப்பட்ட நூல் ஒன்று இருந்தால் போட்டிப்பரீட்சைகளை இலகுவாக எதிர்கொள்ளமுடியும் என்ற சிந்தனை போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வோரிடம் இருந்து வருகின்றது. இந்த சிந்தனைகளுக்கு ஏற்ற வகையில் உமாசங்கரின் நூல் வெளிவந்துள்ளது.

சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் 500 வினா விடைகளைத் தாங்கி வெளிவந்துள்ள இந்த நூல் நுண்ணறிவுக்கென இலங்கையில் வெளியிடப்படும் முதற்தர தமிழ் மொழிமூல நூல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

கோலங்கள், மொழித்திறன், கணித்திறன், இரகசிய குறியீட்டுத்திறன், கூற்றுக்களைப் பயன்படுத்தல், வரிசை ஒழுங்கமைப்பு, தகவல் ஒழுங்கமைப்பு, வரைபுகள் தர்க்கித்தல், புதிர்கள் என்றவகையில் இந்த நூல் பல்வேறு பிரிவுகளையுடையதாகக் காணப்படுகின்றது.

மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில், அமைந்த இந்த நூலினை வாங்கிப் பயனடைந்து, உமாசங்கரின் முயற்சிக்கு கைகொடுப்பதன் மூலம் மேலும் புதிய நுண்ணறிவு நூல்கள் வெளிவருவதற்கு வழியேற்படும்.

**பூ.நகுலன்**

## இலக்கிய முத்து

## மண்டோதரி புலம்புகின்றாள்

உள்ளத்து உணர்வுகளுக்கு தன் எண்ணம் என்னும் மை கொண்டு வார்த்தைகளால் வடிப்பவனே கவிஞன். தமிழ் இலக்கியப் பரப்பிலே கவிஞன், புலவன் என்கின்ற சொற்பதங்களுக்கு அப்பாற்பட்டு சிகரமாக நிற்பவனே கவிச்சக்கரவர்த்தியாவான்.

நம் தமிழ் மொழியிலக்கியங்களிலே நயத்தால் தனி சிறந்தது கம்பராமாயணம். அதைப்படைத்த கம்பன் மாபெரும் கவிஞன். அவன் தான் கவிச்சக்கரவர்த்தி. எதை, எவ்வாறு, எங்கே வைத்து பாட வேண்டும் என்பதில் அவனுக்கு நிகர் அவனே. அவன் தொட்ட ஒன்றை ஏனையவர்களால் தொட்டுப்பார்க்கக்கூட முடியாது. கம்பநாடன் கவியில் நிறைந்திருக்கும் நயம் உள்ளத்தைத் தொட்டுவிடும்.

மிதிலைப் பென்னாகிய ஜானகியை தசக்கிரீவன் கவர்ந்து செனறுவிட்டான். ஆசை நாயகியைத்தேடி தசரதன் மைந்தன் இலங்காபுரிக்கு வருகிறான். தன் நாயகியைக் கவர்ந்த கைலாய கிரியை தன் காலாலே பெயர்த்த இலங்கை வேந்தன்மேல் இராமன் போர் தொடுக்கின்றான்.

போர்க்களத்தில் ஆயிரம் ஆயிரம் தலைகள் சாய்கின்றன. அன்ன மூட்டிய அண்ணனுக்காக சமர்க்களம் சென்று ஆவி துறக்கிறான். மான மறவன் கும்பகர்ணன். தம்பி மீளாத்துயர் கொண்டதைக் கேள்விப்பட்ட இலங்கை வேந்தன் இடியெனக் களம் புகுகின்றான்.

செருக்களத்திலே தசரதன் மைந்தன் கணைகளால் மேனி சல்லடைப்பட்டு மண்ணை முத்தமிடுகின்றான். இலங்கை வேந்தன் இராவணன் தசக்கிரீவன் தரணியிலே தன்னாவி துறந்து கிடக்கின்றான். இலங்கை மன்னன் இராவணனது ஆசை நாயகி களத்திற்கு வருகின்றாள். மீளாத்துயில் கொண்டிருக்கும் தன் கணவன் மானவீரன் இராவணனது உடலைக்கண்டு பதைத்துப் போய் விடுகின்றாள். எத்தனையோ களங்களிலே இரத்தத்தினால் நெற்றித் திலகமிட்ட இராவணனது உடலில் ஆயிரம் ஆயிரம் சல்லடைகள் அதைக் கண்ணுற்ற மண்டோதரி புலம்புகிறாள்.

மென்மையான எருக்கலம் பூவினை மாலையாக அணிந்த சடாமுடியுடைய சிவன் எழுந்தருளியிருக்கும் கைலாய மலையினை பெயர்த்த என்பிராண நாயகனே வெற்பெடுத்த உன் திருமேனி முழுவதும் எள்ளுக்கூட இருப்பதற்கு இடமில்லாதவாறு உன் உயிர் இருக்கும் இடத்தைத் தேடியா தசரதன் மைந்தன் கணை துளையிட்டது. அல்லது நீ தேன் நிறைந்த மலர்களைச் சூடிய விதையினை உன் மனச் சிறையில் மறைத்து வைத்த, காதல் எங்காவது ஒளிந்திருக்கும் எனக் கருதி உன் உடலை சல்லடைபோட்டு, தடவிப்பார்த்ததுவோ என மண்டோதரி கூற்றாக தன் கவித்துவத்தைக் காட்டி விடுகின்றான் கம்பன். உண்மையில் கம்பன் கவிதைபோல் கற்றாற்கு இதயம் கனியாதே.

**வெள் எருக்கஞ் சடை முடியான்**
**- வெற்பு எடுத்த**
**திருமேனி மேலும் கீழும்**
**எள் இருக்கும் இடன் இன்றி**
**- உயிர் இருக்கும்**
**இடன் நாடி இழைத்தவாறோ**
**கள்ளிருக்கும் மலர் கூந்தல்**
**- சானகியை**
**மனச் சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக் கருதி**
**- உடல்புகுந்து**
**தடவியதோ ஒருவன் வாளி.**
**(கம்பராமாயணம்)**

**லெஸ்லி**

## சினிமா ஒரு பார்வை



## இயக்குநர் அகிரா குரோசாவா

**திரைப்படத் தயாரிப்புப் பணியில் ஈடுபடவரும் இளைஞர்களுக்கு ஓர் அறிவுரையாக பிரலப ஜப்பானிய இயக்குநர் அகிராகுரோசாவா எடுத்துரைத்த பிரபல கருத்துக்கள், டோஹோ நிறுவனத்தால் 1975 இல் பிரசுரிக்கப்பட்டன. அதனை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

"நான் ஒரு திரைப்படத்தைத் தொடங்க யோசிக்கின்றபோது என் நெஞ்சில் பல எண்ணங்கள் உருவாகி அவற்றை உணர வைக்கும். அதிலிருந்து ஒன்று திடீரென கருப்பிடித்து முளைக்கத் துவங்கும். இதைத்தான் நான் கைப்பற்றி விரிவுபடுத்துவேன். ஒரு தயாரிப்பாளரோ அல்லது தயாரிப்பு நிறுவனமோ முன்வந்து எனக்களித்த எந்த ஒரு திரைப்படத் திட்டத்தையும் நான் ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்ல நினைக்கும் என் வேட்கையிலிருந்துதான் என் படம் உருவாகிறது. என் எந்த ஒரு திரைப்படத் திட்டத்தின் வேராயும் எனக்கிருப்பது ஏதோ ஒன்றை வெளிப்படுத்த வேண்டிய என் அகமனத்தேடலே. இந்த வேரைப் பேணிப் பாதுகாத்து ஒரு மரமாய் வளர்ப்பது திரைக்கதையே. அந்த மரத்தைப் பூக்கவைத்து கனி கொடுக்கச் செய்வது இயக்குநர் பணியே.

ஒரு நல்ல திரைக்கதை இருந்தால் ஒரு நல்ல இயக்குநர் ஒரு மகோன்னத திரைப்படத்தைத் தயாரித்துவிட முடியும். அதே திரைக்கதையைக் கொண்டு ஒரு சுமாரான இயக்குநர், ஓரளவு ஓடக்கூடிய படத்தை எடுத்துவிட முடியும். ஆனால், ஒரு மோசமான திரைக்கதையைக் கொண்டு ஒரு நல்ல இயக்குநர் கூட ஒரு சிறந்த படத்தை எடுத்துவிட முடியாது. உண்மையான திரைப்படத்திற்கான வெளிப்பாட்டிற்கு கமராவும், மைக்ரோபோனும் நெருப்பையும் நீரையும் கடக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதுவே ஒரு உண்மையான திரைப்படத்தை உருவாக்கும். இதைச் செய்வதற்கேற்ற சக்தியை அளிக்கக் கூடிய ஒன்றாய் திரைக்கதை இருக்க வேண்டும்.

உங்கள் நோக்கம் ஒரு திரைப்பட இயக்குநர் ஆவது தான் என்றால் திரைக்கதை எழுத நீங்கள் உலகின் சிறந்த புதினங்களையும், நாடகங்களையும் கற்றறிய வேண்டும். ஏன் அவை சிறந்ததென நீங்கள் யோசிக்க வேண்டும். நீங்கள் படிக்கும்போது எங்கிருந்து உணர்ச்சி வெளிப்பட்டு வருகின்றது என்று உணருகிறீர்கள்? எவ்வகையான உணர்ச்சிகளை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்? கதாபாத்திரங்களையும் நிகழ்வுகளையும் அவர் செய்திருப்பது போல் காட்ட எத்தகைய துல்லியத் தன்மையை ஆசிரியர் உட்படுத்த வேண்டும்? இவையனைத்தையும் நீங்கள் பெறமுடியும் என்ற நிலைவரை நீங்கள் தெளிவாகப்படிக்க வேண்டும். சிறந்த திரைப் படங்களையும் பார்க்கவேண்டும். மிகச் சிறந்த திரைக் கதைகளைப் படிப்பதோடு, சிறந்த இயக்குநர்களின் திரைப்படக் கோட்பாடுகளையும் கற்றறியவேண்டும்.

நான் இளைஞனாக இருந்த காலத்திலிருந்து ஒரு புத்தகம் படிக்கும்போது கூடவே ஒரு கையடக்கமான குறிப்பேடு ஒன்றையும் வைத்திருப்பேன். படிக்கும்போது எனது எதிர்விளைவுகளையும் என்னை நெகிழவைக்கும் விடயங்களையும் எழுதிக்கொள்வேன்.

இத்தகைய கல்லூரிக் குறிப்பேடுகள் அடுக்கடுக்காய் என்னிடம் குவிந்து கிடக்கின்றன. ஒரு திரைக்கதை எழுதுவதற்காக நான் செல்கின்றபோது, இவற்றைத் தான் நான் படிப்பேன். இவை எப்போதும் எங்கோ ஓரிடத்தில் என்னை அடுத்த கட்டத்திற்கு இட்டுச்செல்லும் முனைப்புப் புள்ளியை வழங்கி வருகின்றது. ஒரு வரி வசனத்திற்குக் கூட இந்தக் குறிப்பேடுகளில் இருந்து நான் குறிப்புகள் எடுத்துக்கொள்வதுண்டு. எனவே நான் சொல்ல வருவது என்னவென்றால் படுக்கையில் படுத்தபடி புத்தகம் படிக்காதீர்கள்.

பலர், நடிகர்களின் அசைவை ஒரு சூம்லென்ஸ் மூலம் பின்தொடர்வதையே தெரிவு செய்கின்றனர். ஒரு நடிகரின் நகர்வைப் பதிவு செய்ய மிக இயல்பான வழி அவர் செல்லும் அதே வேகத்திலேயே கமராவும் நகர்வதுதான், பலரும் நடிகர் நடித்தபடியே நகர்ந்து ஓரிடத்தில் நிலைக்கும் வரை காத்திருந்து அவர் மீது சூம் நகர்கின்றது. இதை மிகவும் தவறான ஒன்றாகவே நான் நினைக்கின்றேன். நடிகர் நகர நகர, கமராவும் பின்தொடரவேண்டும். நடிகர் நிற்கும்போது கமராவும் நகர்வை நிறுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதி பின்பற்றப்படவில்லை என்றால் பார்வையாளர்களும் கமரா இருக்கும்



உணர்வைப் பெற்றுவிடுவார்கள்.

படத்தொகுப்பில் மிக முக்கியமானது Objectivity ஒரு காட்சியை எடுக்க நீங்கள் எத்தனை பிரச்சினைகளைச் சந்தித்தீர்கள் என்பது பொருட்டே அல்ல. அது பார்வையாளர்களுக்குத் தெரியாது.

படத்தொகுப்பு ஒரு சுவாரஸ்யமான வேலை. படமாக்கப்பட்ட திரைப்படச்சுருள் வந்தவுடன் அவற்றை எப்போதாவது நான் என்குழுவினருக்கு அப்படியே காட்டுவேன். மாறாக நான் படப்பிடிப்பு முடிந்தவுடன் படத்தொகுப்பு அறைக்குச்சென்று படத்தொகுப்பாளருடன் சுமார் மூன்று மணிநேரம் அமர்ந்து காட்சிகளைப் பொருத்துவேன். அதன் பிறகு அதை என் குழுவினரிடம் காட்டுவேன். அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக படத்தொகுப்புச் செய்யப்பட்ட பகுதிகளை காட்டுவது அத்தியாவசியமாகிறது. சில நேரங்களில் அவர்கள் படப்பிடிப்பில் நடப்பது என்ன என்றே புரிந்து கொள்வதில்லை. அல்லது ஒரு காட்சி எடுக்க ஏன் 10 நாட்கள் செலவிட வேண்டியுள்ளது என்று அறியமாட்டார்கள். தொகுக்கப்பட்ட படத்தை அவர்கள் பார்க்கும் போது அவர்கள் உழைப்பின் பலனை கண்டு மீண்டும் உற்சாகம் பெறுவர். அவ்வப்போது நான் படத்தொகுப்புச் செய்து வருவதால் படத்தொகுப்பு முடிந்தவுடன் நான் Fine Cut மட்டுமே செய்யவேண்டியிருக்கும்.

பல ஆண்டுகளாக நான் நிறைவேற்றிய விடயங்களை ஏன் நான் இளைஞர்களிடம் ஒப்படைக்காமல் இருக்கின்றேன் என்ற கேள்வி அடிக்கடி எழுகிறது. நான் அப்படிச்செய்யவே முயற்சிக்கின்றேன். என்னுடன் பணியாற்றிய உதவி இயக்குநர்களில் 99 விழுக்காடு பேர் அவர்களாகவே இயக்குநராகிவிட்டனர். அவர்களில் ஒருவரும் மிகமுக்கியமான விடயங்களை அறிந்து கொள்ள கஷ்ரப்பட்டிருப்பார்களென்று நான் நினைக்கவில்லை.

## எனது மிதிவண்டிக்காலம்



மிதிவண்டிக்காலம்
உண்மையிலேயே சுகமானது
நான் + எனது மிதிவண்டி +
சுற்றம் சூழல் பேசியபடியும்,
உரத்தும் பதித்தும்
பாடியபடியாயும்
பயணிப்பது பற்றிய
கனவுகளில்
இறந்த காலங்கள் உயிர்
கொண்டன,
உயிர் கொண்டவை
உல்லாசமாய் நடந்தன.

குன்று குழி
சுடுபுழுதி, கழிச்சேறு
எனவான மண்மணக்கும்
தெருமுதுகில்
சவாரி செய்யும் மனதுக்கு
கஸ்டமே இருப்பதில்லை

ஆடை முதுகொட்ட
வியர்த்து
பின் அது காய்கையில் நாறும்
தோல்மீது புழுதிக் கவசம்
இருந்து கடிக்கும்.

விரைவுப் பயண வழியிலும்
கூடவரும்
உறவுகளின் உரையாடல்கள்
தூரத்தையும் நேரத்தையும்
குழைத்துத் தின்றுவிடும்.

வீதியோர உரையாடல்களில்
உண்மை உணரப்படும்,
உறவு வசப்படும்
உரிமை என்றாகி உறுதிபெறும்
ஒற்றைத் தெருவோரம்
வனம் அடர்ந்து சிலிர்க்கும்
விதவித பறவைகள்
விசித்திர உரையாடல்கள்
விந்தையான உலகம்தான்

தனிமைப் பயணத்தை
பல்லிழித்துக் காட்டும்
குரங்குகள்
குறுக்கே தாவும் முயல்
நின்று பார்த்து நிதானித்து
வீதிகடக்கும் பாம்பு
குட்டைச் சேற்றில்
மணத்தபடி
கிடந்தூறும் எருமை
மரநிழலில் இளைப்பாறும் மாடு
அந்தரத்தில் அவசரப்பட்டு
மேயும் ஆடு.

ஆனைப்பயமிருந்தாலும்
சில்வண்டுகளின் சீட்டியின்
துணையில்
மரமிருந்தும் பறந்தும்
மினுங்கும்
மின்மினிகளின் ஒளியிலான
பயணவழி பற்றி
சொல்லவே முடியாது.

ஆட்காட்டி அலறி மிரட்டும்
பொழுதுகளில்
நிலவு பெய்தாலும்
இருட்சுவர் தடுத்தாலும்
குழியில் இடறி
வேர்களில் தடுக்கி
நீள் பயணம் தொடர்ந்தது.

உண்மையிலேயே
சத்தியத்திலும் சத்தியமாய்
எனது மிதிவண்டிக்காலம்
மறக்க முடியாதது.

நீயும் கூடப் பயணித்தாயா?
ஆமெனில் உணர்வாய்.
இல்லையெனில்
இளக்காரமாயிருக்கலாம்
என்பதில்
ஆச்சரியப்பட ஏதுமில்லை.

கற்பனையில் பயணித்து
முடிவு செய்வதில்
ஆட்சேபமேதுமுளதா?

எனது
பழைய மிதிவண்டிகளின்
காலம்
உண்மையிலேயே
மறக்க முடியாதது.
இருந்தும் என்ன ?
எனது அப்பொற்காலத்தை
இழந்துதான் போனேன்.

**கை.சரவணன்**

சர்வதேச அரசியல் கே.ரி.கணேசலிங்கம்



# ஜனாதிபதி புஷ்ஷின் ஐரோப்பிய விஜயம் ஈராக் நெருக்கடிக்கு தீர்வை ஏற்படுத்துமா?

உலக அரசியல் போக்கு மேற்கு ஆசியாவில் மையங்கொண்டிருந்தாலும் அதை நோக்கி ஏனைய பிராந்தியங்களை ஈர்ப்பதில் கவனம் கொண்டிருக்கின்றது. ஈராக்கில் அரசியல் மாற்றம் ஒன்றுக்கான பிரேரணையுடன் செயற்பட்டு வரும் அமெரிக்கக் கூட்டணி தம்மால் உருவாக்கப்பட்ட திட்டத்தை திணிப்பதிலும் கரிசனை காட்டிவருகின்றது. இவ்வாறான திணிப்புக்களை உலகத்தில் பல நாடுகள் மீது அமெரிக்கா திணிக்க முயன்ற நிகழ்வுகளும் அவற்றை சாதுரியமாகப் பயன்படுத்தி வெற்றி கண்ட நாடுகளையும் அவதானிக்க முடிகிறது.

இந்த வரிசையில் கிழக்குத்திமோர், யூகோசிலாவியா சமஷ்டி அலகுகள் என்பவற்றை வெற்றிகரமான அதிகாரக் கைமாற்றுகை எனக் கூறலாம். ஆனால், இது பிராந்தியத்திற்கு பிராந்தியம் அமெரிக்கா பின்பற்றி வரும் மாறுபட்ட கொள்கையாகவே அமைந்துள்ளது. இவ்வாறான வரையறைக்குள் ஈராக்கின் இடைக்கால அரசுக்கான அதிகாரப்பரிமாற்றம் நிகழவில்லை. இது மேற்காசியப் பிராந்தியத்திற்கென விசேடமான ஒரு கொள்கைத் திட்டத்தை முன்வைக் அமெரிக்கா தயாராகி வருகிறது.

அமெரிக்க பிரித்தானியக் கூட்டணி ஈராக்கின் இடைக்கால அரசு பற்றி முன்வைத்த முதலாவது பிரேரணை பாதுகாப்புச் சபையின் ஏனைய நாடுகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதனால் அமெரிக்கா மீண்டும் ஒரு பிரேரணையை வரைந்து விவாதத்திற்கு விடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

அமெரிக்கக் கூட்டணி முன்வைத்த பிரேரணையில் கூட்டணியின்படைகளுக்கும், ஈராக்கைப் பொறுப்பேற்கவுள்ள அரசுக்கும் இடையிலான தொடர்பினை தெளிவாக வரையறுக்கவில்லை என்பதுடன் அவ்விடைக்கால அரசு ஈராக்கிலுள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் மீது பூரணகட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்பனவற்றை இரண்டாவது தடவையாக வலியுறுத்தியுள்ளன. குறிப்பாக சீனா, ரஷ்யா, பிரான்ஸ், என்பனவற்றுடன் ஜேர்மனியும் இணைந்து இக்கோரிக்கையை விடுத்துள்ளன. ஏற்கனவே ஒரு தடவை இப்பிரேரணை திருத்தப்பட்டதுடன் ஈராக் மீதான படையெடுப்பின் போது பாதுகாப்புச்சபை நடந்து கொண்ட அணுகுமுறையினையே நினைவு படுத்துவதாக உள்ளது.

அத்தகைய நெருக்கடியின் போது அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாக இராணுவ நடவடிக்கை எடுக்க முடிவெடுத்ததுடன் ஐக்கிய நாடுகள்சபை வலுவற்ற ஒன்றாக மாறியது.

மீண்டும் அத்தகைய ஒரு நிலையை ஈராக் இடைக்கால அரசுக்கான பிரேரணைக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் இக்கட்டத்தில் அமெரிக்கா பிரிட்டனுடன் சேர்ந்து ஈராக்கின் இடைக்கால அரசை நிறுவ முடியுமா என்பது யதார்த்தமான கேள்வியாகும்.

காரணம் - தனித்து அமெரிக்கா பெரும் நெருக்கடியை ஈராக்கில் அடைந்துவருகிறது. இந்நெருக்கடியைத் தனித்து எதிர்கொள்ள முடியாது. பிரிட்டனை இணைத்து வைத்துக் கொள்ளும் கொள்கையை அமெரிக்கா கொண்டிருந்தாலும் பிரிட்டனின் போக்கும் மிகப் பிந்திய காலப்பகுதியில் மாறத்தொடங்கிவிட்டது.

ஈராக் இடைக்கால ஆட்சி விடயத்திலேயே பிரிட்டனும், அமெரிக்காவும் முரண்பட்டுக் கொண்டதைக் குறிப்பிடலாம். மேலும் பிரிட்டன் யுரோவிலும், யுரோலாந்திலும் இணைவது பற்றிச் சிந்தித்து வருகிறது. ஆட்சிக்குப் புறம்பாக பிரித்தானிய மக்கள் வொஷிங்டன் - லண்டன் உறவை அடியோடு நிராகரிக்க விரும்புகின்றன. அத்துடன் அமெரிக்காவிற்கும் ஜனாதிபதி புஷ்ஷின் கொள்கைகளுக்கும் எதிராக உலக மக்கள் எதிர்ப்பது மட்டுமல்லாமல், அமெரிக்கர்களே வெட்கப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல்கள், அவமானங்கள், பழிவாங்கல்கள் எனப் பலவிடயங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவையாவற்றையும் அமெரிக்கா எதிர்கொள்ள முடியாமல் திணறுவதுடன் நெருக்கடி மிக்க சூழலில் தோற்றுப்போகாமல் வெற்றிகரமாகப் பின்வாங்குவதற்கான ஒன்றாகவே இடைக்கால ஈராக்கிய அரசமைப்பது பற்றியும் அமெரிக்கா கவனமெடுத்துள்ளது.

இவ்வகையான அணுகுமுறை ஒன்றும் புதியதல்ல. அமெரிக்க ஆட்சியாளருக்கும் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கும் கைவந்த கலையாகும். இதனால் ஈராக் தொடர்பான இடைக்கால அரசை நிறுவும் போதும் அமெரிக்கா தனது தலையீட்டை மிகக்கெட்டியானதாக ஆக்கவே முயலும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஈராக் தற்போதைய சூழலை உலக மயப்படுத்தத் தயாராகும் அணுகுமுறையை அமெரிக்கா பின்பற்றி வருகிறது. புஷ்ஷும் அவரது நிர்வாகமும் தோற்றுவிடும் என்பதில் அவர்களுக்கே அதிக நம்பிக்கை உண்டு. ஆனால் அமெரிக்கா தோற்றுவிடக்கூடாது என்பதில் தான அவர்கள் அக்கறையாக உள்ளனர்.

எனவே நெருக்கடி வலுக்குமாயின் அமெரிக்கா தனித்து ஈராக்கில் இடைக்கால அரசுக்கான திட்டமிடலைத் தயாரித்து கையளிக்கும். அவ்வாறான சூழல் ஏற்படாது தவிர்க்கவே அமெரிக்க ஆட்சியாளர்கள் புதிய நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

3 நாள் விஜயமாக அமெரிக்க ஜனாதிபதி ஐரோப்பாவுக்குச் சென்றுள்ளார். பிரேரணைக்கு முட்டுக்கட்டைபோடும் அனைத்து நாடுகளுக்கும் புஷ் பயணஞ்செய்ய முடிவெடுத்துள்ளார். இரண்டாம் உலகயுத்தத்தின் நினைவுகளைப் பகிரும் நோக்கத்துடனேயே புஷ் தனது விஜயத்தை ஆரம்பித்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஆனால் புஷ் ஈராக்கில் இறந்த தனது படைவீரர்களின் நினைவுடனேயே ஐரோப்பாவிற்குள் சென்றிருப்பார். ஏனெனில் பிரேரணையை எதிர்க்கும் அரசுகளுக்கு போரின் இழப்பீடுகள் நன்கு தெரியும் என்பதைக் காட்டுவதுடன், அமெரிக்க நலன்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடாது என்ற ராஜீக முயற்சியாகவே புஷ்ஷின் நகர்வு அமைந்திருக்கும்.

ஆனால் புஷ்ஷின் ராஜீக முயற்சிக்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையிலேயே உள்ளன என்பது பிரேரணை தொடர்பான விவாதத்தில் தெரியவந்துள்ளது.

சில சந்தர்ப்பத்தில் புஷ் ஏதாவது பேரம் பேசல் முயற்சியில் ஈடுபடலாம். அதுவும் ரஷ்சியா சீனா போன்ற நாடுகளுடன் மட்டுமே நிகழும். ஏனைய நாடுகள் புஷ்ஷின் ராஜீக முயற்சிக்கு மசிவது கடினம்.

புஷ் அதிகம் அச்சமடைவது பிரான்ஸ் அதிபர் சிராத் பற்றியே. சிராத் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியை கைப்பற்றியதுடன் சிராக்கை கொலை செய்ய சி.ஐ.ஏ பாரிய சதித்திட்டம் ஒன்றை வகுத்தபோதும் பிரான்ஸின் உளவுப்பிரிவால் அது கண்டறியப்பட்டு முறியடிக்கப்பட்டது. எனவே சிராக் மட்டுமல்ல முழு பிரான்ஸ் நாட்டவருமே புஷ்ஷிற்கு



எதிரானவர்களாகவே காணப்படுவர்கள். இது பிரான்ஸ ஆட்சியினருக்கு பெரும் நெருக்கடியாக மாறிவிட்டது. இவ்வாறே ஜேர்மனியும் உள்ளது.

ஆனால், புஷ் நேட்டோ நாடுகளை சந்திப்பதுடன் தனது ஈராக் தொடர்பான கொள்கையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகக் கூட பயன்படுத்திக் கொள்ளலாம். அதனால் ஈராக்கில் போரைத் தூண்டுவது பற்றியில்லாவிட்டாலும் ஈராக் நிலைமை ஆபத்தானது என்பதை உணர்த்துவதாக அமையலாம்.

அமெரிக்காவின் ஈராக்பற்றிய கொள்கையை மிகத் தெளிவாக கொலின்பவல் வெளியிட்டார். அதாவது அமெரிக்கக் கூட்டணிப் படைகளை வெளியேறும்படி கூறுவதற்கான அதிகாரம் ஈராக்கை ஆளவுள்ள இடைக்கால அரசுக்கு வழக்கப்படக்கூடாது என்பதுடன் கூட்டணிப் படைகள் அந்த அரசுடன் ஒரு பங்குதாரராக இணைந்து செயல்படவேண்டும் என்றார்.

அமெரிக்காவின் மேற்காசியா பற்றிய கொள்கையும் அவை சார்ந்த உலக நாடுகள் பற்றிய கொள்கையும் பங்குதாரராக பணியாற்றுவதேயாகும். இதன் மூலம் மேற்காசிய அரசுகளுக்கு அமெரிக்கா முன்வைக்கும் தீர்வத் திட்டம் இதுவாகவே உள்ளது. அப்பிராந்தியத்தில் காணப்படும் விடுதலைப்போராட்டமாக இருந்தாலும் சரி அல்லது அரசுகளுக்கு எதிரான ஆயுத மோதல்களாக இருந்தாலும் சரி அமெரிக்கா கொள்கை வகுப்பில் அமெரிக்க இராணுவம், நிர்வாகம் என்பனவற்றின் பங்குதாரராகப் பணியாற்றுவதே அதன் நோக்கமாக உள்ளது.

உலக நாடுகளும் ஈராக் தொடர்பான அமெரிக்க கொள்கையில் மாறுதலை ஏற்படுத்த விரும்புகின்றனவேயன்றி ஈராக் அரசியலிலோ அல்லது உள்நாட்டு அதிகாரப்பரவலாக்கம் பற்றியோ அதிகம் கவனம் செலுத்தவில்லை. அமெரிக்கக் கூட்டணிப்படைகளும் சரி எதிரணியினரும் சரி தமக்கிடையேயான அதிகாரப் போட்டிக்கான தளமான ஈராக் விடயத்தை பயன்படுத்துகின்றார்களே அன்றி. ஈராக்கின் அரசியல் பொருளாதார நிர்வாக சிக்கல்களுக்குத் தீர்வு காண்பவர்களாக இல்லை. இதனால் ஏற்படப்போகும் மாறுதலும் திருப்பங்களும் ஈராக்கில் நிலவிவரும் தாக்குதலையோ நெருக்கடியையோ தீர்க்கப்போவன அல்ல.

ஐரோப்பாவுக்குச் சென்றுள்ள புஷ்ஷை சிராக் நிராகரிகும் மாதிரியான அரசியல் தந்திரத்தை வெளிப்புடுத்தியுள்ளமை உலக அரசியலில் பேசப்படுவதாக மட்டுமே அமையப் போகின்றது. யதார்த்தமாக எந்த மாறுதலையும் உடனடியாக ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால் ஐரோப்பாவுக்குள் உருவாகி வரும் ஜேர்மன், பிரான்ஸ்கூட்டை உடைக்க புஷ் போட்டதிட்டமும், அதனை முறியடிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதியின் அணுகுமுறையும் மாறுபட்ட சூழலை உருவாக்கியுள்ளது.புஷ் ஈராக் விடத்திற்கு மட்டுமாக பிரான்ஸ் சுக்குச் செல்லவில்லை. அதனை சிராக் நன்கு புரிந்துகொண்டிருப்பதுடன் பெரும் எதிரியை எதிர் கொள்வது போன்று நடந்துள்ளார். செய்தியாளர் மாநாட்டில் ஒருவரை ஒருவர் நேரே பார்க்கமுடியாத பகையாளிகளாகக் காணப்படுகின்ற போக்கு ஐரோப்பிய நலனுக்கு பாதுகாப்பானதாக அமைந்துள்ளது.

பிரான்ஸ்ஸைப் பிரிக்கவும் ஏற்கனவே பிரிட்டன் கொண்டிருக்கும் மாறுபட்ட கொள்கையை சீர்செய்யவுமே புஷ் ஐரோப்பா சென்றிருக்கின்றார். ஆனால் அவரது விஜயம் அடிப்படையில் தோல்வியைந்துவிட்டதென்றே கூறலாம். மறுபக்கத்தில் அமெரிக்காவின் சிறிய கூட்டாளிகளின் உறவை பலப்படுத்துவதில் புஷ் வெற்றிகாணலாம். அதனால் உலக ஒழுங்கிலோ அல்லது புஷ்ஷிற்கு ஏற்பட்டிருக்கும் தற்போதைய நெருக்கடியிலிருந்தோ மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

ஈராக்கின் இடைக்கால அரசமைப்புக்கான பிரேரணை சர்வதேச மட்டத்தில் மட்டுமல்ல உள்நாட்டிலும் பலவீனமானதொன்றாகவே அமையவுள்ளது. ஈராக்கியர்களின் முரண்பாடுகளையோ ஆட்சிக்கான பகிர்வுகளையோ அதிகம் முதன்மைப்படுத்துவதாக தீர்வுத்திட்டம் மேலும் அமெரிக்க கூட்டணியின் நிலைப்படுத்தலை சாத்தியப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்.

இதனால் ஈராக்கிய மக்களுக்கு எதுவும் பெரிதாகக் கிடைக்கப்போவதில்லை. இது கிழக்குத்தி மோர் மாதிரியோ யுகோசிலாவியா மாதிரியோ அல்லாத மிகப் பலவீனமான தீர்வுத் திட்டமாகவே விளங்குகிறது. மேற்காசிய அரசுகளை எப்படிக் கையாளப் போகின்றதென்பதைக் காட் டுவதற்கான முயற்சியாகவே அமெரிக்கா இத்தீர்வுத்திட்டத்தை முன் வைத்துள்ளது. எனவே இது யதார்த்தமான ஆட்சி மாற்றமு மலல நிர்ணயமான அதிகாரப் பகிர்வு திட்டமும் அல்ல.

# கனேடிய நாடாளுமன்ற........

*10 ஆம் பக்கத் தொடர்ச்சி*

வில்லை. அதையிட்டு யாழ்ப்பாணத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது, அதற்கான வாய்ப்பு வரவில்லை என்ற மழுப்பல் பதில் அமைச்சரிடம் இருந்து வந்தது.

வேடிக்கை என்னவென்றால் இலங்கைக்கான கனேடிய தூதுவர் விடுதலைப் புலிகளின் தலைவர்களை வன்னி சென்று நேரில் சந்திக்கிறார். கைகொடுத்து நலம் விசாரிக்கிறார். அவர்களோடு நின்று படம் எடுத்துக் கொள்கிறார். ஆனால், கனேடிய அரசு விடுதலை புலிகளைமட்டு மல்ல, அதன் ஆதரவாளர்களையும் கனடா வருவதற்கு தடைவிதித்துள்ளது.

தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ் வுக் கழகம் - மக்களுக்கு மகத்தான தொண்டு செய்கிறது. முன்பள்ளி கள், வீடுகள், சத்துணவு மையங்கள், குழந்தைகள் இல்லங்கள், கணினி பயிற்சி மையங்கள் என பல சமூக, நல்வாழ்வு, கல்விப் பணி களை மேற்கொண்டு வருகிறது. அந்த அமைப்புக்கு வரிவிலக்கு கொடுக்க கனேடிய வருவாய்த்துறை திணைக்களம் கடந்த 8 ஆண்டுக ளாக மறுத்து வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கனடா வந்த வண.பிதா. கஸ்பர்ராஜ் விமான நிலையத்தில் வைத்து குடிவரவு அதிகாரிகள் கைது செய்து கைவிலங்கு பூட்டி வந்த விமானத்தில் கனேடிய அரசு அவரை நாடு கடத்தியது. இதையிட்டு குடிவரவு அமைச்சர் மற்றும் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எழுத்தில் செய்து கொண்ட முறைப்பாடு செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பயனற்றுப் போனது. சாட்டுக்கு ஒரு லிபரல் நாடாளுமன்ற உறுப்பினராவது வாய் திறக்கவில்லை.

எனவே லிபரல் கட்சி கனேடிய தமிழ் மக்களின் உயிர் மூச்சான விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது போல் நடிக்கிறதேயொழிய நடைமுறையில் அதற்கு மாறாகவே செயல்படுகின்றது.

நாளை இலங்கை அரசின் பிடிவாதப் போக்கால் அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தால் லிபரல் கட்சி அரசு விடுதலைப்புலிகளை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத இயக்கம் என பிரகடனப் படுத்திவிடும். அமைதிப் பேச்சுவார்த்தை நடப்பதால்தான் விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்க்கப்படாது விடப்பட்டுள்ளது.

எஞ்சி இருப்பது புதிய மக்களாட்சிக் கட்சி. இந்தக் கட்சி ஒரு முற்போக்கான கட்சி. குடிவரவாளர்களை நட்போடு பார்க்கும் கட்சி. அதன் தலைவர் 'யக் லேய்ரன்' கனேடிய தமிழ் மக்களது சிக்கல்களையும் அபிலாசைகளையும் நன்கு அறிந்தவர்.

ரொரன்றோ மாநரக சபையின் நீண்ட கால உறுப்பினர். வீடில்லாத ஏழைகளுக்கு குரல் கொடுத்தவர். தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்துக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தவர்.

இவர் லிபரல் கட்சி வேட்பாளர் டெனிஸ் மில் போட்டியிடும் ரொறன்ரோ-டன்போத் தொகுதியில் போட்டி இடுகிறார். லேய்ரன் அவர்கது மனைவி **Olivia Chow** பக்கத்துத் தொகுதியான **Trinity-Spadina** வில் போட்டி இடுகிறார். இந்தத் தொகுதியில் வசிக்கும் தமிழ் வாக்காளர்கள் தங்களது வாக்குகளை இவர்களுக்கு அளித்து வெற்றி அடையச் செய்ய வேண்டும்.

ஏனைய தொகுதிகளில் வெல்லும் வாய்ப்புள்ள புதிய மக்களாட்சிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள். அப்படி வாய்ப்பில்லாத போது லிபரல் கட்சிக்கு வாக்களித்து அந்தத் தொகுதியில் கனேடிய பழமைவாதக் கட்சி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அரியவற்றுள் எலாம் அரிதே பெரியாரைப்*
*பேணித் தமராக் கொளல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நமக்குள் சில வார்த்தைகள்

தமிழ்ப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மற்றும் இதேபோன்ற நுண்துறைகளுடன் தம்வாழ்வைப் பிணைத்துக்கொண்டோர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, சமகாலம் தொடர்பான உறுதியின்மை குறித்த அச்சம் முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது பெருமளவில் அதிகரித்துள்ளமையை அண்மைக்கால பல நிகழ்வுகளின் மூலம் உணரக் கூடியதாக உள்ளது.

காலத்தையும் மனிதகுல வரலாற்றையும் மட்டுமல்ல எதிர்கால சமூகத்தின் உயர்ச்சியையும் தமது படைப்பாற்றலும், கலை இலக்கிய வெளிப்பாடுகளாலும் மற்றும் தொடர்பூடகத் துறையூடான பன்முகப் பரிமாணம்கொண்ட தொலைநோக்குச் சிந்தனையுடன் கூடிய பல்வேறு கருத்தாக்க வெளிப்பாடுகளாலும் பதிவுசெய்து மானிட உன்னதம் பற்றிய இலட்சியக் கனவுகளுடன் வாழும் இவர்களின் சொந்த வாழ்க்கை குறித்து நாம் எப்போதாவது ஆழ்ந்த அக்கறையுடனும், சமூகப் பொறுப்புடனும் சிந்தித்திருக்கிறோமா? என்ற கேள்விக்கு அர்த்த புஷ்டியான சாதகமான பதிலைக் கூறநாம் தயாராக இல்லை என்பது கவலைக்குரிய விடயமே.

நேற்றுக்காலையில் நல்லை ஆதின மண்டபத்தில் நடைபெற்ற பல்துறை படைப்பாளிகளுக்கான விருது வழங்கல் விழாவொன்றில் விருதுக்குரியவர்களாக கௌரவிக்கப்பட தேர்ந்தெடுத்தவர்களில் சிலர் உயிருடன் தற்போது இல்லை என்பது மனதை அழுத்தும் செய்தியாகும்.

சிலமாதங்களுக்கு முன்பு யாழ்.பல்கலைக்கழகம் -கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்த இருபெரும் கலைஞர்களும் அமரர்களான பின் அந்தப் பட்டத்திற்கு தகுதி வாய்ந்தவர்களாக இனங்காணப்பட்ட துயரம் குறித்து முன்னர் இதேபகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

இதனை ஏன் மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றால் நாம் உயிருடன் இருக்கும்போதே ஒருவருக்கு வழங்கவேண்டிய கௌரவத்தையும், அங்கீகாரத்தையும், மதிப்பையும் உரிய முறையில் நேரடியாகவே அவர் மனம் நிறையும் வண்ணம் வழங்குவதன் மூலம் அந்த மகத்தானவர்களை வாழும் வருங்காலத்தலைமுறையினரும் புரிந்துகொண்டு கௌரவிக்க வழிவகுத்தவர்களாக இருக்கவேண்டும் என்பதாலேயே.

ஒரு படைப்பாளியோ, பத்திரிகையாளனோ, கலைஞனோ அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் இனத்தால், அவன்வாழும் சமூகத்தால், அவனது தேசத்தால் பாதுகாக்கப்படவேண்டிய மகத்தான சொத்து என்பதை ஆரோக்கியமான அறிவுசார்ந்த, கலாசார பாரம்பரியமிக்க, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் தேசியப் பொறுப்பை இயல்பாகவே உணர்ந்தவர்கள் அனைவரும் புரிந்துகொள்வார்கள்.

உலகில் நாகரிக சமூகத்தவர்கள், மனிதம் பற்றிய தெளிவுமிக்கவர்கள் உள்ள நாடுகளில் இந்தப் படைப்பாளிகளும், கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் எவ்வாறெல்லாம் மதித்து கௌரவிக்கப்படுகிறார்கள் என்பதைக் கேள்விப்படும்போது உண்மையில் நாம் எமது பொறுப்பின்மைக்காக வெட்கமும், வேதனையும் படவேண்டியுள்ளது.

ஒரு கலைஞனை எம்மால் இனங்கண்டு கௌரவிக்கமுடியவில்லை.

ஒரு எழுத்தாளனின் படைப்பை பணம்கொடுத்து வாங்கிப் படித்து அவனது சமூகப்பணியை அங்கீகரித்துப் பாராட்டமுடியவில்லை.

ஒரு பத்திரிகையாளனை மதித்து அவனது தேசியப் பொறுப்புடன், வாழ்வைத் துச்சமென மதித்து மேற்கொள்ளும் கடைமையை கௌரவித்து அவனுக்கு பாதுகாப்பாகச் செயற்படமுடியவில்லை.

ஆனாலும் , நாம் வாய்ச்சொல்வீரம் பேசுவதில் சளைத்ததில்லை.

பாரதியே -நல்லதோர் வீணைசெய்தே நலங்கெடப்
புழுதியில் எறிவதுண்டோ...சொல்லடி சிவசக்தி.
எனைச்சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமைதாராயோ இந்தமானிடம் பயனுற வாழ்வதற்கே.

என்று ஆதங்கம் ததும்ப இறைவனிடம் கெஞ்சும் அளவுக்கு நம் மாபெரும் கலைஞர்கள், படைப்பாளிகள், பத்திரிகையாளர்களின் நிலையிருப்பது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த பழம்பெருமைபேசும் தமிழினத்துக்கு அவமானகரமானதாகும்.

நாம் இந்த நிலையில் தொடர்ந்தும் இயங்குவது வெறும் மனிதர்களாக எம்மை அடையாளப்படுத்தும் என்பதை ஒரு எச்சரிக்கையாகவே கூறவேண்டிய தருணம் இதுவாகும்.

அற்பத்தனமான கருத்தியல் மற்றும் வரட்டுத்தனமான சித்தாந்த முரண்பாடுகள், அரசியல் கோட்பாட்டுப் பேதங்களுக்கு அப்பால், மனிதம் பற்றிய மனித மேன்மை பற்றிய விடயங்களில் நாம் எம்மை உடன்பாடு காணச்செய்யவேண்டிய வரலாற்றுக்கடமையை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

நமது இனத்தின் விடுதலை - நமது தேசத்தின் விடுதலை என்பதெல்லாம் மானுடநேசத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டால் மட்டுமே அது தமிழினத்தின் தனித்துவத்தை உறுதிசெய்வதாக அமையும்.

இதற்கு நாம் நமது மண்ணின் மைந்தர்களான எமது கலைஞர்கள், படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் அனைவரையும் இனங்கண்டு மதித்துப் பாராட்டிக் கௌரவிப்பதுடன் அவர்களை எமது தேசிய சொத்தாகக் கருதி, பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகளை நாமே எடுக்கவேண்டும்.

செத்தபின் சிவலோகம் செல்ல வழிகாட்டும் பித்தர்களாக நாம் தொடர்ந்தும் இயங்குவோம் எனின் நம்மையையும் செத்தவர்களாகவே இனங்காட்டிவிடும்.

# நாடும் நடப்பும்

செய்தி :- மீண்டும் சமாதானத்துக்கான யுத்தத்தை நோக்கி ஜனாதிபதி செல்கிறாரா? ஆய்வாளர்கள் கேள்வி.



### சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரி

# உதவி, பதிவு மருத்துவர்கள் இன்றுமுதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் மீண்டும் இன்றுமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமது சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரியே இவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுமார் 1550 உதவி மருத்துவர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களே வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் நோயாளர்கள் பெருமளவில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் உதவி மற்றும் பதிவு மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தாலும் நோயாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று அரசாங்க மருத்துவர் சங்கம் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

(01)

# ஆயிரம் புதிய பஸ்களை அரசு இறக்குமதி செய்யும்

### போக்குவரத்து அமைச்சர் தகவல்

பிரயாணிகளின் நன்மை கருதி இந்தவருடம் 1000 புதிய பஸ்களை இறக்குமதிசெய்து அரசாங்கம் சேவையில் ஈடுபடுத்தவிருப்பதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இந்திய உதவித்திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப்படும் இந்த புதிய பஸ்கள் விசேடமாக கிராமப்புறங்களின் போக்குவரத்துச் சேவையை விஸ்தரிப்பதற்கே பயன்படுத்தப்படும்.

கிராமப்புறங்களில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பெருமளவில் பிரயாணிகள் நிரம்பி வழிகின்றனர். இதனால் கிராமப் புறங்களூடான சேவைகள் விஸ்தரிக்கப்படவுள்ளது.

அத்துடன் கிராமப்புறங்களிலிருந்து பிரபல பாடசாலைகளுக்கான பாடசாலை பஸ் சேவைகளும் மீள ஆரம்பிக்கப்படும். தற்போது பெரும் எண்ணிக்கையான பஸ்கள் சேவையின்றி பழுதடைந்த நிலையில் தரித்து நிற்கின்றன. உதிரிப் பாகங்கள் இல்லாததாலேயே இவ்வாறு சேவையில் ஈடுபடமுடியாதுள்ளது.

இந்த பஸ்களை விரைவில் திருத்தியமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். வீரகெர என்ற இடத்திலுள்ள பழுதுபார்க்கும் நிலையம் மீளவும் இயக்கப்படும். பஸ்களை துரிதமாக திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# சிவப்பு அரிசியின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை

சிவப்பு அரிசியின் விலையை இன்றுமுதல் ஏழு ரூபாவால் குறைப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருப்பதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

சதொச.நிறுவனத்தின் ஊடாகவே விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்படவுள்ளது. தற்போது நாட்டில் சிவப்பு அரிசியின் விலை 37 ரூபாவாக விற்கப்பட்டுவருகிறது.

இது நுகர்வோரைப் பெருமளவில் பாதித்துள்ளது. இதனால் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி சிவப்பு அரிசியின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் அரசாங்கத்திடம் அரிசி கையிருப்பில் இல்லாமையால் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் பேச்சுநடத்தி இந்த முடிவு எட்டப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

சிவப்பு அரிசியின் விலையை குறைக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையை எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலுக்கான பிரசார உத்தி என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வடபகுதி இளைஞர்கள் கொழும்பில் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சிறிலங்கா ரெலிகொம் நிறுவன தலைமையகத்துக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இரண்டு வடபகுதி இளைஞர்களைத் தாம் கைதுசெய்திருப்பதாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இந்த இரு இளைஞர்களும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடமிருந்து கமரா ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கோட்டை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# குண்டு தயாரிப்பு நிலையம் கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டிக்கு குண்டுகளைத் தயாரித்து வழங்கிய நிலையம் ஒன்று கொழும்பில் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை கொழும்பு மோதரைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த குண்டு தயாரிப்பு நிலையத்திலிருந்து 46 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.


குண்டு தயாரிப்பில் ஈடுபட்ட ஆறுபேரைப் பொலிஸார் கைது செய்தனர். இந்த உற்பத்தி மையத்திலிருந்தே கொழும்புப்பகுதியில் இடம்பெற்றுவரும் பாதாள உலகக் குற்றச் செயல்களுக்கு குண்டுகள் விநியோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது.

(01)

கனடாவிலிருந்து நக்கீரன்

# கனேடிய நாடாளுமன்ற தேர்தலும் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களும்!

இது தேர்தல் காலம். இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத்துக்கு கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தேர்தல் நடந்தது. பக்கத்து



பிரதமர் போல் மாட்டின்

நாடான இந்தியாவின் 14 ஆவது மக்களவைக்கு அதே மாதம் 20 ஆம் திகதி தொடங்கி மே 10 ஆம் திகதி வரை 5 கட்ட தேர்தல் நடந்தது. இந்த இரண்டு நாடுகளிலும் ஆளும் கூட்டணி அரசு தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் இடம் பெற்றுள்ளது.

கனடாவில் இந்த மாதம் 28 ஆம் திகதி 34 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற உள்ளது. பொதுவாக கனடாவில் நாடாளுமன்றத் தேர்தல்கள் வசந்த காலம் அல்லது இலையுதிர் காலத்தில்தான நடைபெறுவது வழக்கம்.

இம்முறை வழக்கத்திற்கு மாறாக கோடையில் தேர்தல் நடக்க இருக்கிறது. கடந்த மே 23 ஆம் திகதி பிரதமர் போல் மாட்டின் பொதுத் தேர்தல் அறிவிப்பை வெளியிட்டார்.

கனடா பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரிய நாடு. அதன் மொத்த பரப்பளவு 9.97 மில்லியன் சதுரகிலோமீற்றர் ஆகும். மக்கள் தொகை 30.1 மில்லியன் (3 கோடி). வாக்காளர்களின் எண்ணிக்கை 22.7 மில்லியன்.

கடந்த நவம்பர் 2000 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 13 மில்லியன் அலலது 61.2 வீத வாக்காளர்கள் வாக்களித்தனர். நாடாளுமன்ற உறுப்பிர்களின் தொகை இம்முறை 301 இல் இருந்து 303 ஆக அதிகரித்துள்ளது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சிக்கு 168, கனேடிய பழமைவாதக் கட்சிக்கு 73, கியூபெக்வா கட்சிக்கு 33, புதிய மக்களாட்சிக் கட்சிக்கு 14, சுயேட்சைகள் 9, வெற்றிடம் 4 என மொத்தம் 301 ஆசனங்கள் இருந்தன.

கடந்த மூன்று தேர்தல்களிலும் கனேடிய லிபரல் கட்சியே அமோக வெற்றி பெற்று பிரதமர் யேன் கிரச்சியன் தலைமையில் ஆட்சி செய்தது.

ஆனால், இம்முறை தேர்தல் அறிவிப்பு வெளிவந்து 11 நாட்கள் கூட ஆகாத நிலையில், லிபரல் கட்சி தோல்வி முகம் நோக்கிப்போகிறது எனக் கருத்துக் கணிப்புக்கள் அடித்துச் சொல்கின்றன. மேலும் அடுத்த அரசு சிறுபான்மை அரசுதான் என இந்தக் கருத்துக் கணிப்புக்கள் சுட்டுகின்றன.

மிகுந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் களத்தில் இறங்கிய பிரதமர் போல் மாட்டினும் அவரது லிபரல் கட்சியும் கண்ணைக்கட்டி திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்டுள்ள நிலையில் உள்ளது. லிபரல் கட்சிக்கு எதிரான எதிர்ப்பு அலை அட்லாண்டிக் பகுதி நீங்கலாக எங்கும் பலத்து வீசுகிறது.

தேசிய அளவில் லிபரல் கட்சிக்கு 34, கனேடிய பழமைவாதக் கட்சிக்கு 30, புதிய மக்களாட்சிக் கட்சிக்கு 16 மற்றும் பசுமைக் கட்சிக்கு 6 வீத ஆதரவு இருப்பதாக **Ipsos-**



கிளார்க்

பசுமைக் கட்சித் தலைவர்

**Reid** அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்புத் தெரிவிக்கிறது.

ஒன்ரோறியோ மாகாணத்தை பொறுத்தளவில் லிபரல் - கனேடிய பழைமைவாதக் கட்சி இரண்டுக்கும் முறையே 36 விழுக்காடு ஆதரவும், புதிய மக்கள் கட்சிக்கு 21 வீத ஆதரவும் இருப்பதாகத் தெரிவித்துளளது.

மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை உறுப்பினர்களை ஒன்ரோறியோ மாகாணம் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புகிறது.

இதுவரை காலமும் ஒன்ரோறியோ லிபரல் கட்சியின் கோட்டையாக விளங்கி வந்தது. முன்னைய தேர்தல்களில் லிபரல் கட்சி இரண்டு மூன்று தொகுதிகள் நீங்கலாக, ஏனைய தொகுதிகளைக் கைப்பற்றி வந்திருக்கிறது. ஆனால், இம்முறை மொத்தம் 103 தொகுதிகளில் பாதிக்கு மேலான தொகுதிகளை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

பிரதமர் மாட்டினுக்கும் லிபரல் கட்சிக்கும் என்ன நடந்தது? அடுத்த வசந்த காலத்தில் வைக்க வேண்டிய தேர்தலை அவசரப்பட்டு பத்து மாதம முன்னரே வைத்து, வெற்றிவாகை சூடி மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமரலாம் என்ற மாட்டினது கனவு இப்படி அசுர வேகத்தில் ஏன் கலைய வேண்டும்? மாட்டின் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டாரா?

போல் மாட்டினுக்கும், அவரது கட்சிக்கும் எதிராக வீசும் அலைக்கு நான்கு முக்கிய காரணிகளைக் குறிப்பிடலாம்.

1) பதினொரு ஆண்டு காலம் லிபரல் கட்சி ஆட்சி செய்து விட்டது. எனவே, ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்த வேளை வந்துவிட்டதென மக்கள் நினைக்கிறார்கள்.

2) கியூபெக் மாகாணத்தில் பிரிவதா? இல்லையா? என்பதையிட்டு நடந்த நேரடி வாக்கெடுப்பின் போது (1995) 250 மில்லியன் டொலர்களைச் செலவழித்ததில் ஊழல் நடந்துள்ளது என கனேடிய கணக்காய்வாளர் தெரிவித்தார். இதனை அடுத்து புலன் விசாரணை மேற்கொண்ட கனேடிய பொலிஸார் இருவரைக் கைது செய்து கிரிமினல் வழக்குத் தொடுத்துள்ளது. இதனால், மக்களது கோபம் ஊழலுக்கு இடம் கொடுத்த லிபரல் கட்சி மீது திரும்பியுள்ளது.

3) என்ன நேர்ந்தாலும், எது வந்தாலும் வரியை உயர்த்த மாட்டோம் என்று வாக்குறுதி அளித்து ஒன்ரோறியோ மாகாண ஆட்சிக் கதிரையை பிடித்த மாகாண லிபரல் கட்சி, இப்போது முன்னர் கைவிடப்பட்ட மருத்துவ காப்புறுதிக் கட்டணத்தை மீளக் கொண்டு வந்துள்ளது.

இந்தக் கட்டணம் ஆண்டுக்கு 20 ஆயிரம் டொலர்களுக்கு மேல் ஊதியம் பெறுபவர்கள் மீது விதிக்கப்படும். ஆகக் கூடிய கட்டணம் ஆண்டுக்கு 900 டொலர்கள். இது லிபரல் கட்சித் தலைவர்கள் படுபொய்யர்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாத ஏமாற்றுப் பேர்வழிகள் என்ற கெட்ட பெயரை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

4) கனேடியன் அலயன்ஸ் கட்சியும் - புதிய முற்போக்கு பழமைவாதக் கட்சியும் ஒன்றாக இணைந்து பலமான கனேடிய பழமைவாதக் கட்சியாக உருப்பெற்றுள்ளது.

மக்கள் லிபரல் கட்சியை பழி வாங்கத் துடிப்பதற்கு மேற்காட்டிய



டுஷிலப

கியூபெக்ஸ் கட்சித் தலைவர்

காரணிகள்தான் முதன்மையானவை.

இந்த வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்களே அவர்கள் அரசியல் வாதிகள் அள்ளி வீசும் உறுதி மொழிகளைக் கேட்டு முதலில்



மக்டெனொவ்

புதிய ஜனநாயக் கட்சி தலைவர்

ஏமாந்து விடுகிறார்கள். ஆனால் - உண்மை தெரிந்ததும் அரசியல் வாதிகளை வீட்டுக்கு அனுப்பி வைப் பதில் மன்னர்கள்.

இந்திய மக்களவைத் தேர்தலிலும், சட்டசபைத் தேர்தலிலும் ஆட்சியில் இருந்த கட்சிகளை வாக்காளர்கள் தோற்கடித்து விட்டார்கள். உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, குஜராத் மாநிலங்களில் பாரதீய ஜனதா கட்சி, ஆந்திராவில் (லோக் சபை, சட்டசபை) சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், கேரளத்தில் (லோக சபை) இந்திய காங்கிரஸ், கர்நாடகத்தில் (லோக்சபை, சட்டசபை) காங்கிரஸ் கட்சி படுதோல்விகளைச் சந்தித்தன.

இங்குள்ள அரசியல் கட்சிகளுகக்கு இடையில் பாரதூரமான கொள்கை வேறுபாடு கிடையாது. மார்க்சிச சித்தாந்த அடிப்படையில் கனேடிய பழமைவாதக் கட்சி, வலது சாரிக் கட்சி - புதிய மக்களாட்சிக் கட்சி - இடதுசாரிக் கட்சி, லிபரல் இரண்டுக்கும் நடுவில் ஒரு புறம் பார்த்தால் கொஞ்சம் வலதுசாரி, மறுபுறம் பார்த்தால் கொஞ்சம் இடதுசாரி.

பெரும்பாலும் கனேடிய அரசை இங்குள்ள உளவுத்துறை, பொலிஸ் துறை, அமைச்சு மேலதிகாரிகள் போன்றவர்களே இயக்குகிறார்கள்.

அதிகாரிகள் சொன்ன இடத்தில் அமைச்சர்கள் கையெழுத்து வைக்கிறார்கள். சுரேஷ் மாணிக்கவாசகம் கைது செய்யப்பட்டதற்கு அதிகாரிகளது கெடுபிடிதான் காரணம். உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தாங்கள் எடுக்கும் கொழுத்த சம்பளத்தை நியாயப்படுத்த அவ்வப்போது பயங்கரவாதிகள் எனக் குற்றம்சாட்டி வெள்ளையர் அல்லாதாரைக் கைது செய்கிறார்கள்.

மொகமட் சேகி மகூப் (**Mohamed Zedki Mahjoub**)

என்ற எகிப்தியர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் - யூன் 2000 இல் கைது செய்யப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக ரொறன்ரோ தடுப்பு மையத்தில் (இது கியூபாவில் உள்ள அமெரிக்க **Guantanamo Bay** தடுப்பு முகாமுக்கு ஒப்பான கனேடிய தடுப்பு முகாம் என நீதிபதி ஒருவர் கண்டித்திருக்கிறார்) சிறை வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீது எந்தவித நீதி விசாரணையும் இதுவரை இல்லை. அவர் நாடு கடத்தப்படவும் இல்லை. பின்லேடனுக்கு சொந்தமான ஒரு பண்ணையில் வேலை செய்தததையும் அவரை நான்குமுறை சந்தித்ததையும் ஒப்கொள்ளும் மொகமட் - பின்லேடன் அப்போது ஒரு பயங்கரவாதியாகப் பார்க்கப்படவில்லை என்கிறார்.

இப்படி கனேடிய உளவுத்துறையும், பொலிஸாரும் அமெரிக்க உளவுத்துறைக்கு கொடுத்த முற்றிலும் பிழையான தகவலின் அடிப்படையில் அகப்பட்டுக் கொண்டவர் மாகர் அரார் (**Maher Arar**) என்ற கனேடிய குடிமகன்.

சிரியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அங்கிருந்து ஓடி வந்து கனடாவில் அரசியல் புகலிடம் தேடிக் கொண்டார். இவர் ஒரு கணினி மென்பொருள் பொறியியலாளர். செப்ரெம்பர் 2002 ஆம் ஆண்டு விடுமுறையைக் கழிக்க தனது மனைவி இரண்டு குழந்தைகளுடன் தியூனீசியா போனார். திரும்பும்போது



டே

பழைமை வாதக் கட்சித் தலைவர்

அமெரிக்கா ஊடாக தனியே புறப்பட்டுவந்தார். அப்போதுதான் சனி உருவில் தோன்றிய அமெரிக்க உளவுத்துறையிடம் மாட்டிக் கொணடார்.

அமெரிக்க உளவுத்துறை அவரைக் கைது செய்து, தடுப்பு முகாமில் வைத்து வாரக்கணக்காக விசாரித்தார்கள். விசாரணையின் பின் எந்த நாட்டைவிட்டு உயிருக்குப் பயந்து ஓடி வந்தாரோ அதே சிரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு ஓராண்டு காலம் 6 அடி நீளம், 7 அடி உயரம், 3 அடி அகலம் உள்ள ஒரு பாதாள சிறையில் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்.

அவருக்கு தெரியாத சங்கதி கனேடிய பொலிஸார் அமெரிக்க உளவுத்துறைக்கு அவரை பயங்கரவாதி எனக் காட்டிக்கொடுத்தது. இது பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது என்ற கதைதான்.

கனடாவில் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசியல் எந்தவித அதிகாரமும் கிடையாது. அவர்கள் வெறும் கை உயர்த்தும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். அமைச்சர்களில் பிரதமருக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டும் கொஞ்சம் அதிகாரம் உண்டு. அவர்களைப் அடுப்படி அமைச்சர்கள் என்று அழைபபார்கள்.

போல் மாட்டின் அடுத்த 5 ஆண்டுகளுக்கு 9 பில்லியன் (900 கோடி) டொலர்களை லிபரல் கட்சி நல்வாழ்வுத் திட்டங்களுக்குச் செலவழிக்கும் என வாக்குறுதி அளித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு சித்தாந்த அடிப்படையில் மிக நெருக்கமாக இருக்கும் கனேடிய பழமைவாதக் கட்சி, தொழில் நிறுவனங்களின் வரிகளைக் குறைத்து, இராணுவச் செலவை அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.


புதிய மக்களாட்சிக் கட்சி செல்வந்தர்கள் மீது விதிக்கப்படும் வரியை அதிகரித்து சமூக ஏணியில் கீழ் மட்டத்தில் உள்ள எளிய மக்களது நல்வாழ்வு, கல்வி, வதிவிட மேம்பாட்டுக்கு உதவப் போவதாகத் தெரிவித்துள்ளது. அதே சமயம் வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக் குறை ஏற்படாது சமன் செய்யப்படும் என்றும் கூறியுள்ளது.

இந்த நிலையில் கனடாவில் வாழும் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்?

முதலில் யாருக்கு வாக்கு அளிக்கக்கூடாது என்பதைப் பார்ப்போம். கனேடிய பழமைவாதக் கட்சி பணக்காரர்களது கட்சி. இந்த நாடு வெள்ளை இனத்தவர் கையில் இருக்க வேண்டும் என்று நினைக்கிற கட்சி. ஈராக் மீது அமெரிக்கா நடத்திய சட்டத்துக்கு மாறான தாக்குதலை ஆதரிக்கும் கட்சி.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் புலிகள் உட்பட அரச அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள என நினைக்கிற கட்சி. எனவே - மறந்தும் யாரும் இந்தக் கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது என்பது சொல்லாமலே விளங்கும்.

அடுத்து லிபரல் கட்சி. அமெரிக்காவை முந்திக்கொண்டு விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கம் என முத்திரை குத்திய கட்சி. இந்த



கிறிற்ரியன்

லிபரல் கட்சித் தலைவர்

விடயத்தில் முன்னைய முற்போக்கு பழமைவாதக் கட்சியின் வெளியுறவுக் கொள்கையையே இந்தக் கட்சியும் அட்சரம் தவறாமல் பின்பற்றுகிறது.

நோர்வே அரசின் அமைதி முயற்சியை ஆதரிக்கிறதாக லிபரல் அரசு வாயளவில் சொல்கிறதே ஒழிய நடைமுறையில் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை மாதிரி நடந்து கொள்கிறது.

சென்ற ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட வெளியுறவு அமைச்சர் பில் கிறகம் வன்னி போக

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கார்க் குண்டுத் தாக்குதலில் பாக்தாத்தில் மூவர் பலியாகினர்

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடபகுதியில் நேற்று நடந்த கார்க் குண்டுத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தவிர இரண்டு அமெரிக்கத் துருப்பினர் உட்பட பல பொதுமக்கள் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாக்தாத்திலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள தாஜி பிரதேசத்தின் ஈராக் குடிமக்கள் பாதுகாப்பு அலுவலகமே இந்தத் தாக்குதலின் இலக்காக அமைந்திருந்ததாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஈராக்கிற்கான அதிகாரங்கள் வழங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே - பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் பாதையோரம் அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதுடன், இரு படையினர் படுகாயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நஜாப் நகரில் இடம்ற்ற தாக்குதலிலும் ஐந்து அமெரிக்கப்படையினர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

சூடானில் கடத்தப்பட்ட

# உதவி நிறுவனங்களின் 16 உறுப்பினர்களும் விடுதலை

சூடானில் பணியாற்றிய வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் 16 பேர் சூடானிய விடுதலை இராணுவம் என்ற அமைப்பினால் முன்னர் கடத்தப்பட்டிருந்தனர். அவர்கள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுவிக்கப்பட்ட 16 பேரில் ஐ.நா அமைப்பின் உதவிப் பணியாளர்களும் அடங்குவதாக ஐ.நா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. சூடானில் விடுதலைக்காகப் போராடும் சூடானிய விடுதலை இராணுவம் என்ற அமைப்பினாலேயே இவர்கள் கடத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

கடந்த வருடம் சூடானின் டர்பூர் பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயல்களினால் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், மனிதநேய நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது.




# முன்னாள் அமெரிக்க அதிபர் றீகன் தனது 93 ஆவது வயதில் காலமானார்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான றொனால்ட் றீகன் தனது 93 ஆவது வயதில நேற்றுமுன்தினம் காலமானார்.

அல்ஹிமேர்ஸ் என்ற நோயினால் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக உயிர்ப் போராட்டம் நடத்திய றீகன் லொஸ்ஏஞ்சல் நகரிலுள்ள தனது வீட்டில் மரணமானார்.

1981 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த றீகன் பனிப்போர் காலத்தில் முக்கிய பங்கு வகித்ததுடன் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் ஆரம்பத்தில் அமெரிக்காவை வழிநடத்தியவராவார்.

அல்ஹிமேர்ஸ் என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவருக்கு, நிமோனியா ஏற்பட்டதையடுத்தே நேற்றுமுன்தினம் பி.ப 1 மணியளவில் காலமானார்.


1994 ஆம் ஆண்டு கல்ஹிமேர்ஸ் என்ற நோயினால் பாதிக்கப்பட்ட றேகனுக்கு, இந்த நோயினால் மூளையில் உள்ள செல்கள் சேதமுற்றதுடன், ஞாபக சக்தியையும் இழக்கும் நிலை ஏற்பட்டது.

றீகனின் சடலம் கலிபோர்னியா - சிமி பள்ளத்தாக்கிலுள்ள ஜனாதிபதி நூலகம் மற்றும் அரும்பொருட் காட்சிச்சாலையில் வைக்கப்பட்ட பின்னர் வொஷிங்ரனுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அரச மரியாதைகளுக்குப்பின் கலிபோர்னியாவுக்கு எடுத்துவரப்படும்.

இரண்டு முறை அமெரிக்க ஜனாதிபதியாக பதவிவகித்த இவர், ஹொலிவூட் படங்களில் நடித்துப் புகழ் பெற்றிருந்த நிலையில் அரசியலுக்குள் நுழைந்தார்.

தனது 69 ஆவது வயதில் அமெரிக்காவின் 40 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட றீகன், ஏனைய அமெரிக்க ஜனாதிபதிகளை விடவும் அதிக காலம் வாழ்ந்தவர் என்ற பெருமையை பெற்றவராவார்.

# கொங்கோவின் கிழக்கு நகரிலிருந்து கிளர்ச்சிப் படைகள் வெளியேற்றம்!



கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதி நகரான புக்காவுவிலிருந்து கிளர்ச்சிப் படைகள் வெளியேறிக்கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை புக்காவு நகரைக் கைப்பற்றிய கிளர்ச்சிப் படைகள், நகரை விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருப்பதாக உள்ளூர் ஐ.நா தளபதி ஜெனரல் இயன் கிஸ்பேர்க் தெரிவித்தார்.

புக்காவு நகரை கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றியதைக் கண்டித்து கொங்கோ ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்றுமுன்தினம் ஐ.நா வளாகத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதுடன், கொள்ளையடிக்கவும் முயன்றனர்.

தலைநகர் கின்ஸாசாவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஐ.நா அமைதிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

நாட்டின் பல்வேறு நகரங்களிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது - கிழக்கு நகரான புக்காவுவை கிளர்ச்சிப் படைகளிடமிருந்து ஐ.நா அமைதிப்படையினர் காப்பாற்றத் தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டது.

புக்காவு நகர் வீழ்ச்சியடைந்ததையடுத்தே, ஐ.நாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன.

கின்ஸாசாவிலுள்ள தமது வளாகத்தில் கொள்ளையிட முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாம் தாக்குதல் நடத்திய போதே மூன்று கொங்கோலியர்கள் மரணமடைந்துள்ளதாக -

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா தலைமையக அமைதிப்படைத் தலைவர் ஜீன் மரையன் கெகினோ தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூர் கிளர்ச்சிப் படைத்தளபதியான ஜெனரல் லோரன்ட் என்குண்டா, புக்காவு நக



ரிலிருந்து 300 போராளிகளை வெளியேற உத்தரவிட்டிருப்பதாகவும், இவர்கள் நகருக்கு வெளியே நிறுத்தப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அரச படைகள் தமது இனத்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக, ருவாண்டாவின் ருட்சி இனத்துக்கு நெருக்கமான பன்ஜா முலேன்கே இனத்தைச் சேர்ந்த கிளர்சிப் படைத்தளபதிகள் தெரிவித்தனர்.

## நோர்மன்டி தரையிறக்கத்தின்

# 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு

இரண்டாம் உலகயுத்த காலத்தில் இடம்பெற்ற மாபெரும் நோர்மன்டி 'டி - டே' தரையிறக்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நேற்று வெகு விமரிசையாக நினைவுகூரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 20 நாடுகளின் தலைவர்களும், இரண்டாம் உலக யுத்தத்



தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான போர்வீரர்களும் பிரான்ஸ் சென்றிருந்தனர்.

இதுவரை இடம்பெற்ற டி - டே நிகழ்வுகளில் ஜேர்மன் தலைவர்கள் எவரும் பங்குகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், பிரிட்டன் பிரதமர் பிளேயர், ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், நாஸி ஜேர்மனி மீது கூட்டுப்படைகள் தரையிறக்கத் தாக்குதலை ஆரம்பித்த கடற்கரை நோக்கி அமைந்த மலையுச்சியிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் குறுகிய நேர உரையொன்றையும் நிகழ்த்தினார்.

பல்வேறு உலகத் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதையொட்டி, நவீன வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் அதிகாரிகளும், இராணுவத்தினரும் இணைந்து - பிரான்ஸில் அமைதிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கையாக இது அமைந்தது.

நோர்மன்டி தரையிறக்க டி-டே




நிகழ்வின் 60 ஆவது ஆண்டை நினைவுகூரும் வகையில் சுமார் 12 ஆயிரம் போர்வீரர்கள் கடற்கரைப் பகுதியில் தரையிறங்கினர்.

இவர்களுடன் நூற்றுக்கணக்கான 2 ஆம் உலக யுத்தகால போர் வீரர்களும் படகுகள் மூலம் தரையிறங்கினர்.

உலக இராணுவ வரலாற்றில் மிகப்பெரிய தரையிறக்கத் தாக்குதல் நடவடிக்கையாகவும் - ஹிட்லரை வீழத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கையாகவும் நோர்மன்டி தரையிறக்கம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கின் கிளர்ச்சித் தலைவர் சதார் ஷியா மதத் தலைவரை சந்தித்தார்!



ஈராக்கில் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சதார் - அந்நாட்டின் பிரபல ஷியா மதத் தலைவரான ஆயதுல்லா அலி அல்சிஸ்ராணியை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நஜாப் நகரிலிருந்து சதார் தனது ஆதரவுப் படைகளை வெளியேற்றுவது தொடர்பான முடிவை எடுத்ததற்கு மதத் தலைவர் ஆயதுல்லா அலி-அல்சிஸ் ராணி தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதாக சதாரின் பேச்சாளர் தெரிவித்தார்.

சதாரின் இந்த முடிவினையடுத்து நஜாப் நகரில் கடைகள் மற்றும் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. ஈராக்கியப் பொலிஸார் இந்த இடங்களில் பாதுகாப்பினைப் பொறுப்பேற்கவுள்ளனர்.


சதாரின் ஆதரவுப் படைகளும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளும் நஜாப் நகரிலிருந்து வெளியேறவுள்ளதனை அடுத்து, அப்பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்புமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் படையினருக்கும் சதார் ஆதரவுப் படையினருக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டது தொடர்பாக கேள்விப்பட்டோம். இதற்கு இறைவனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டுமென அப்பகுதி வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

மதத் தலைவருடன், சதார் அரை மணி நேரமாக. பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதன் போது அதிகரித்து வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்துதல், சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பம் போன்றவை கலந்துரையாடப்பட்டதாக - சதாரின் பேச்சாளர் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அத்துடன், சதாரின் இந்த நிலைப்பாடுகளுக்கு மதத்தலைவர் தனது முழுமையான ஆதரவை வழங்கியதாகவும், இந்தச் சந்திப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கப்பல் தாங்கிகளில் இருந்து கழுவி அகற்றப்படும் எண்ணெய், தருக்களில் சிந்தும் எண்ணெய், தொழிற்சாலைக் கழிவுகளாக வரும் எண்ணெய் என 21 மில்லியன பீப்பாய்கள் அளவிலான எண்ணெய் ஆண்டுதோறும் கடலில் கலக்கின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்காணிப்புக்குழு - புலிகள் வவுனியாவில் சந்திப்பு!

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வவுனியா - விளக்குவைத்தகுளத்தில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மணலாறு பிராந்தியப் பொறுப்பாளர் லலித் மற்றும் மாறன் ஆகியோரும்,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் இரு ஸ்கன்டிநேவிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.

# 29 ஈழத்தமிழ் அகதிகள் மன்னாரை வந்தடைந்தனர்

தமிழ்நாடு - சத்தியமங்கலம் பகுதியிலுள்ள அகதிமுகாமில் தங்கியிருந்த ஈழத்தமிழ் அகதிகளில் 29 பேர் நேற்றுமுன்தினம் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

சிறிய மீன்பிடிப் படகுகளில் வந்த இவர்களை தலைமன்னார் கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் இவர்களை மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

இவர்கள் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தலைமன்னார் வந்த 29 அகதிகளில் 16 ஆண்களும், 13 பெண்களும் அடங்குவர். இவர்கள் வவுனியா முதலியார்குளம், கன்னாட்டி, சாந்தசோலை மற்றும் மட்டக்களப்பு பெரிய கல்லாறு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். (201)

## புதிய...

மிக்கப்பட்டதும் - இராணுவ அதிகாரிகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரியாகவுள்ள மேஜர் ஜெனரல் சூல சென்விரத்ன இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிப்படுவார்.

பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பதவிவகிப்பார் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## கிளிநொச்சி...

இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரையும் படையினர் கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளின் நிலைப்பாடுகள் குறித்த ஜே.வி.பியினர் தெரிவிக்கும் கருத்துக்களை கவனத்தில் எடுக்கத் தேவையில்லை!

## சந்திரசேகரன் அறிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புலிகளின் நிலைப்பாடு குறித்து ஜே.வி.பியினர் முன்வைக்கும் கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லையென்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திப் புரட்சி செய்ததாகக் கூறிய ஜே.வி.பியினர் இன்று நாடாளுமன்ற ஆசனங்களை கூட்டிக்கொள்வதற்காகப் பேரம் பேசுகின்றார்கள்.

சிங்கள மக்களின் வாக்குறுதிகளைப் பெறுவதற்காக எல்லாவிதமான குறுக்கு வழிகளையும் கையாள்கின்றார்கள். இனவாதமும், மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் செய்கையுமே ஜே.வி.பியின் அரசியல் மூலதனமாகவுள்ளது.

இனப்பிரச்சினை தீர்ந்து நாட்டில் அமைதி ஏற்பட்டால் இவர்களின் இனவாதமும் அரசியல் குறுகிய யுக்தி கூறும் மக்கள் மத்தியில் ஒரு பாடமாகப் போய்விடும்.

தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச கவனத்தை ஈர்ந்துள்ளது. உலக நாடுகள் அனைத்துமே தமிழருக்கு உரிமை வழங்கவேண்டும் என்று ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன.

உரிமைகளையும் சுதந்திரமான விடுதலையையும், பெறுதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியில் நீண்டதூரம் சென்றுள்ளனர். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத ஜே.வி.பியின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை.

இந்த நாட்டில் இனவாதம் படிப்படியாக இல்லாதுபோகும்போதுதான் ஜே.வி.பியும் இல்லாமல் போய்விடுவார்கள் என்பது உண்மையாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பெரும்...

அமைச்சர்கள் நிபந்தனையைக் கைவிட்ட நிலையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிபந்தனைக்கு சந்திரிகா உடன்பட்டுள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையில் 113 அங்கத்தவர்களுக்கான ஆட்திரட்டல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்ட ஹுசைன் பைலா உள்ளிட்ட நால்வரைத் தம்பக்கம் இணைக்க மங்கள சமரவீர தரப்பு முயன்று வருகின்றது.

# வடக்கு - கிழக்கு ஆளுநரை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவை எதிர்வரும் 11, 12 ஆம் திகதிகளில் இரு அமர்வுகளாக திருகோணமலையில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இந்தச்சந்திப்பில் வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதிகளின் பயன்பாடுகள் குறித்தும் வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (03)

### துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

திருகோணமலை மணிக்கூட்டு கோபுர வீதியில் அமைந்துள்ள மீன் சந்தையில் கடந்த வெள்ளி இரவு இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்தார்.

திருகோணமலை - மகாமயாபுர இல 12 ஐச் சேர்ந்த அந்ரே கென்னடிகே கபில (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார். கொழும்பு-05 ஐச் சேர்ந்த நாமல் தேவப்பிரிய பெர்ணான்டோ என்பவரே வலதுகையில் காயமடைந்தவராவார்.

இவர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். திருகோணமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (04)

### கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை கூடுகின்றனர்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நாளை காலை 9 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் - காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடும்போது - பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்து முடிவு செய்யப்படவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

# தமிழீழ மாணவர் எழுச்சிநாள்...

மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கண்ணன், யாழ்.மாவட்ட கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் ஞானகாந்தன் முதலானோர் இந்த நிகழ்வின் பொதுசசுடரினை ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றிவைத்தார். மாணவர்கள் ஊர்வலமாக எடுத்துவந்த முதல் மாவீரன் பொன்.சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவன் தீசன் ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தனர்.

நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார். இந்த நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் நிகழ்த்தினார்.

இதேவேளை, வடமராட்சியில் கரணவாயிலிருந்து ஆரம்பமான மாணவர் எழுச்சி ஊர்வலமானது நெல்லியடி மத்திய மகா வித்தியாலய திறந்தவெளியில் முடிவடைந்தது.

சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருக்க மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப் படங்களைத் தாங்கியவண்ணம் மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச்சுடரினை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுபபாளர் பாப்பா ஏற்றிவைத்தார். மேஜர் முரளியின் திருவுருவப்படத்திற்கு மாணவர் அமைப்பைச் சேர்ந்த பா.ஆதித்தன் ஈகச்சுடரினை ஏற்றி மலர் மாலை அணிவித்தார். பொன். சிவகுமாரனின் படத்திற்கு வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் செல்வரத்தினம் ஈகச்சடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி மாணவன் யோ.சம்மந்தர் தலைமையில் நடந்த நிகழ்வில் சிறப்புரைகள் மற்றும் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

தீவகப்பகுதி பாடசாலை மாணவர்களின் தமிழீழ மாணவர் எழுச்சி நிகழ்வானது - ஊர்காவற்துறை நீர் தாங்கியடியில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் ஊர்காவற்றுறை கலையரங்கிற்குச் சென்றது. அங்கு எழுச்சி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

ஊர்காவற்துறை அன்ரனிஸ் கல்லூரி மாணவன் ருசேந்திரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை வேலணை மத்திய கல்லூரி அதிபர் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை நெடுந்தீவு பிரதேச அரசியல் பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மாவீரன் கப்டன் யோக்கின் தாயார் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகள, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறை, ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் போன்றோர் உரைகளை நிகழ்த்தினர்.

இதேவேளை - தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் எழுச்சி நிகழ்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றன. முன்னதாக, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து ஆரம்பமான மாணவர் ஊர்வலம் மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி முதலானோரின் திருவுருவப் படங்களைத் தாங்கியவாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சென்றடைந்தது.

அங்கு நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக, யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் கலந்து கொண்டார். இதனைவிட, தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கஜமுகன், தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

வலிகாமத்தில் - சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், உரும்பிராயில் சிவகுமாரனின் நினைவுச் சதுக்கத்திலும், நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் நேற்றைய தினம் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டதுடன், இரவுக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, தமிழீழ எழுச்சி நாள் நிகழ்வுகள் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, மன்னார் கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேசங்களில் மிக எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த எழுச்சி நிகழ்வில் மாணவர்களும், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் பங்குபற்றி உரையாற்றினர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு லெப்டினன்ட் கேணல் சந்திரன் சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது. கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இருந்து பான்ட் வாத்தியம் சகிதம் நகர்ந்த பேரணி சந்திரன் பூங்காவை சென்றடைந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்துவைத்தனர். பொன். சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு திருகோணமலை மகளிர் அரசியற்துறைப் பொறுபபாளர் காருண்யா, தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் பிரபாகரன் ஆகியோர் சுடரேற்றினர்.

சிறப்புரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, திருகோணமலை மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் காருண்யா, கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசாமி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேபோல் மன்னார் சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்திலும் வவுனியாவில் நகர சிறுவர் பூங்காவிலும் மாணவர் எழுச்சி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.(116,34,03,201)

## வவுனியா கூமாங்குளத்தில்...

இவர் முச்சக்கர வண்டியை வாடகைக்கு செலுத்திச் சென்றதாகவும், பின்னர் அவர் வீடு திரும்பவில்லை எனவும், அவரது பெற்றோர் வவுனியாப் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியில் துப்பாக்கிச் சூட்டுத் தடயங்கள் இருப்பதாகவும், இந்தத் துப்பாக்கிச் சூடு 9 மி.மீ துப்பாக்கியால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், இறந்தவரின் உடலில் அடி காயங்கள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகவும், மேலதிக விசாரணைக்காகவும் வவுனியா வைத்தியாலையில் வைக்கப்பட்டுள்ளது.(03)

## இலங்கை குறித்த...

கிய ஆவணங்களை அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு எடுத்துச்செல்ல முயன்றார். அப்போது உயரதிகாரிகளுக்கும் இவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து இவர் மீது சநதேகம் எழுந்தது. இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை

வெளிநாடுகளுக்குகடத்துகிறாரா? என்று சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில் சிங்கப்பூர், புரூணை, அமெரிக்கா போன்ற நாடுகளின் வங்கிகளில் பெருந்தொகையான பணம் வைப்பில் இருப்பது தெரியவந்ததையடுத்து, இந்த வங்கிக்கணக்குகளை முடக்கி வைக்கும்படி றோ அமைப்பு சிபார்சு செய்தது.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாளான கடந்த 14 ஆம் திகதி முதல் இவரைக் காணவில்லை. இவர் நேபாளம் வழியாக வெளிநாட்டுக்கு தப்பியோடி விட்டமை தெரியவந்துள்ளது.

ரவீந்தர்சிங் சில முக்கிய இரகசிய ஆவணங்களை நவீன இயந்திரம் மூலமாக பிரதி எடுத்துக் கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகள் சம்பந்தப்பட்ட இரகசியக் குறிப்புக்களும் இவரால் பிரதியெடுக்கப்பட்டு திருடப்பட்டிருப்பதாக பிரதமர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய மத்திய அரசுக்கும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட துறையினருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக, ஆரம்ப கட்ட விசாரணைகளை றோவின் தலைவர் சகாய் ஆரம்பித்துள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு றோ தலைவர் சகாய பணிக்கப்பட்டிருக்கிறார்.

நேபாளம் வழியாக அமெரிக்காவுக்குத் தப்பியோடியிருக்கலாம் எனக்கருதப்படும் ரவீந்தர்சிங்கின் மனைவி மற்றும் குழந்தைகளுடன் அமெரிக்காவிலேயே வசிப்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளத்தில் இவருக்கு உடந்தையாக இருந்தவர் அமெரிக்க கடவுச்சீட்டு கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ரவீந்தர்சிங் பயன்படுத்திய கடவுச்சீட்டுக்களின் பிரதிகள் விசாரணை அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளது. இவர் தனிப்பட்ட முறையிலும் அலுவலக மட்டத்திற்கு என இரண்டு கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

கடந்த மார்ச் 29 ஆம் திகதியும் இவர் இரகசியமாக வெளிநாடு சென்று வந்ததும் இப்போதுதான் தெரியவருகிறது. பல நாடுகள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இவரது பொறுப்பில் இருந்திருப்பதால் இந்தியாவின் முக்கிய இரகசியங்கள் கடத்தப்பட்டிருக்க வாய்ப்புக்கள் இருப்பதாக தெரியவருகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.